# தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| துணர் ௩௩ | திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௮௰௮ ஏவிளம்பி, கார்த்திகை 1957 நவம்பர், டிசம்பர். | மலர் ௮ |
| --- | --- | --- |


௨

## தமிழ் முனிவர் அகத்தியர்

(திரு தி. வை. சதாசிவ பண்டாரத்தார்)

தமிழ் முனிவராகிய அகத்தியனாரின் படிமங்கள் நம் தமிழகத்தில் கருங்கற்கோயில்களாகவுள்ள சிவன் கோயில்கள் எல்லாவற்றிலும் இருத்தலை இன்றுங் காணலாம். அக் கோயில்களைக் கட்டுவித்த பண்டைத் தமிழ் வேந்தர்கள், அவற்றில் அகத்தியனாரின் படிமங்களை முற்காலத்திலேயே எழுந்தருளுவித்தமைக்குக் காரணம், இம் முனிவர் பெருமானுக்கும் தமிழ் நாட்டிற்கும் ஏற்பட்டிருந்த தொன்மைத் தொடர்பே எனலாம். அத்துணைத் தொன்மைத் தொடர்புடையவராகிய இவர், வடக்கினின்றும் தெற்கே வந்து நம் தமிழகத்தில் தங்கியிருந்தனர் என்பதுதான் வடநூல்களின் முடிபு. ஆக்கவும் அழிக்கவும் வல்லராய் முக்காலங்களும் உணர்ந்து நிறைமொழி மாந்தராக நிலவும் இருடிகள் யாண்டும் எளிதிற் போதற்கும் இருத்தற்கும் ஆற்றல் படைத்தவர் ஆவர். எனவே, இவர் வடபுலத்திலிருந்து தென்புலம் வந்திருக்கலாம்; தென் புலத்திலிருந்து வடபுலஞ் சென்று மறுபடியும் தென்புலத்திற்குத் திரும்பியிருக்கலாம்; கடல் கடந்து கீழ்புலஞ் சென்றிருக்கலாம். ஆகவே, இவர் நாடு யாது என்பதைப்பற்றிய ஆராய்ச்சி ஈண்டு வேண்டப்படுவதன்று. இனி, தொன்னூல்கள் இவரைப்பற்றிக் கூறும் வரலாறுகளை ஆராய்ந்து காண்பாம்.

### 1. அகத்தியனாரும் தமிழ்நாடும்.

சிவபெருமான் மலைமகளை மணந்த காலத்தில் எல்லோரும் இமயத்தில் கூடியிருந்தனராக, அப் பொறையாற்றாமல் வடபுலம் தாழ்ந்து, தென்புலம் உயர்ந்து விடவே, இறைவன் அகத்தியனாரைத் தெற்கின்கண் சென்று பொதியின் மலையில் இருக்குமாறு கூறியருளினர். இவரும் அங்ஙனமே போய்ப் பொதியிலில் இருத்தலும் புவியும் சமநிலை எய்தியதாம். இது கந்த புராணத்திற் கண்ட வரலாறாகும்.

இனி, அகத்தியனார் தென்றிசைக்கு வந்த வரலாற்றைத் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரவுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர்

கூறியுள்ளனர். அது 'தேவரெல்லாருங்கூடி யாம் சேர இருத்தலின் மேருத்தாழ்ந்து தென்றிசை உயர்ந்தது; இதற்கு அகத்தியனுரே ஆண்டிருத்தற்குரியர் என்று அவரை வேண்டிக்கொள்ள, அவரும் தென்றிசைக்கட் போதுகின்றவர் கங்கையாருழைச்சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு, பின்னர் யமதங்கியாருழைச் சென்று அவர் மகனுர் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு, புலத்தியனுருழைச் சென்று அவருடன் பிறந்த குமரியார் உலோபா முத்திரையாரை அவர் கொடுப்ப நீரேற்று இரீஇப் பெயர்ந்து, துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடி யண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டுபோந்து காடு கெடுத்து நாடாக்கிப் பொதியிலின்கண் இருந்து, இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கினர் என்பதாம். அகத்திய னுரைப் பற்றித் தமிழ் நாட்டில் தம் காலத்தில் வழங்கிவந்த செய்திகள் சிலவற்றையே ஆசிரியர் நச்சினுர்க்கினியர் தம் தொல்காப்பி யப்பாயிர உரையில் இவ்வாறு குறிப்பிட்டிருத்தல்வேண்டும் என்பது திண்ணம். எனவே, இத் தமிழ் முனிவரைப்பற்றிய செய்திகள் நம் தமிழகத்தில் அந்நாளில் யாண்டும் பரவியிருந்தனவாதல் வேண்டும். ஆசிரியர் நச்சினுர்க்கினியர் கூறியுள்ள அகத்தியனுர் வரலாற்றில் சிவபெருமான் திருமணம் சொல்லப்படவில்லை; எனினும், வடதிசை யின் தாழ்வு நீங்க இவர் தென்னுடு போந்தமையும் வேறு சில செய்திகளும் அதில் கூறப்பட்டிருத்தல் அறியத்தக்கது.

இம் முனிவர்பிரான், தென்றிசை வந்தபோது காவிரியைக் கொணர்ந்தனர் என்றும் சமதக்கினி முனிவர் புதல்வர் திரண தூமாக்கினியாரை அழைத்து வந்தனர் என்றும் புலத்திய முனிவரின் தங்கையார் உலோபாமுத்திரையாரை அவர் கொடுப்ப மணந்து வந்தனர் என்றும் திருமால் வழியினரான அரசர் பதினெண்மரோடு பதினெண்குடி வேளிரையும் அழைத்து வந்து காடுகளையழித்து நாடாக்கிப் பொதியிலின்கண் இருந்தனர் என்றும் பிறகு இராவணனை இசையில் வென்று அவனைச் சார்ந்தோர் அப்பக்கங்களில் இயங்காத வாறு செய்துவிட்டனர் என்றும் நச்சினுர்க்கினியர் அவ்வுரைப் பகுதியில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாம்.

## 2. அகத்தியனுர்க்குத் தமிழ் அறிவுறுத்திய ஆசிரியர்

அகத்தியர் இறைவனிடம் விடைபெற்றுக்கொண்டு தமிழ் நாட்டிற்குப் புறப்படுங்கால், தென்னுடு தமிழ்மொழி வழங்கும் நாடு என்றும் அங்குள்ள மக்கள் அம்மொழியில் வல்லவர்கள் என்றும் அவர்கள் கேட்பவற்றிற்குத் தாம் விடை கூறுதல் வேண்டும் என்றும் ஆதலால் தமக்குத் தமிழ் இலக்கணத்தை அறிவுறுத்த வேண்டும் என்றும் கூறினராம். இறைவனும் இவர் வேண்டியவாறு இவர்க்கு அவ்விலக்கணத்தைக் கற்பித்தனர் என்று திருவிளையாடற் புராணம் உணர்த்துகின்றது. இவ்வரலாற்ருல் சிவபெருமானே

அகத்தியர்க்கு முதல் ஆசிரியர் என்பது நன்கு புலப்படுதல் காண்க. காஞ்சிப் புராணமும் இங்ஙனமே கூறுவது நோக்கற்பாலது.

கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பரும் இராமாயணத்துள் அகத்தியப் படலத்திலுள்ள

"உழக்குமறை நாலினும் உயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவியி னும்மரபி னுடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்."

என்ற பாடலில் சிவபெருமான் அகத்தியர்க்குத் தமிழ் அறிவுறுத்திய செய்தியைக் குறிப்பிட்டிருத்தல் உணரற்பாலதாம்.

இனி, தொல்காப்பியப் பாயிர விருத்தியில் ஆசிரியர் சிவஞான முனிவர் 'தமிழ் நாட்டிற்கு வடக்கட் பிற எல்லையும் உளவாக வேங்கடத்தை எல்லையாகக் கூறினுர்; அகத்தியனுர்க்குத் தமிழைச் செவியறிவுறுத்திய செந்தமிழ்ப் பரமாசாரியனுகிய அறுமுகக் கடவுள் வரைப்பென்னும் இயைபு பற்றி என்பது' என்று கூறியுள்ளனர். இதனுல், அகத்தியர் குன்றமெறிந்த குமரவேளிடத்தும் ஒரு காலத்தில் தமிழ் இலக்கணம் கற்றிருத்தல் வேண்டும் என்பது அறியக் கிடக்கின்றது. பழனித் தலபுராணமும் இதனை வலியுறுத்தல் காண்க.

பௌத்த சமயத்தினரான பொன்பற்றிக் காவலன் புத்தமித்திரன் என்பார், தாம் இயற்றிய வீரசோழியம் என்னும் தமிழ் இலக்கணத்தில் அகத்தியர் அவலோகிதன்பால் தமிழ் கேட்டனர் என்று கூறியுள்ளனர். அச் செய்தியை

"ஆயுங் குணத்தவ லோகிதன் பக்கல் அகத்தியன்கேட்
டேயும் புவனிக் கியம்பிய தண்டமிழ்"

என்ற பாடற் பகுதியால் நன்கறியலாம்.

இவற்றுல் அகத்தியர்க்குத் தமிழறிவுறுத்திய ஆசிரியர் யாவர் என்பது பற்றி நம் தமிழ் நாட்டில் அக்காலத்தில் வழங்கிய சில செய்திகள் வெளியாதல் காண்க.

## 3. அகத்தியனுரின் இல்லக்கிழத்தியாரும் புதல்வரும்.

அகத்தியரின் மனைவியார் உலோபாமுத்திரையார் ஆவர். இவ்வம்மையார் புலத்திய முனிவரின் தங்கையார் என்றும் அவர் கொடுப்ப, இவர் தமிழ் நாடு போதருங்கால் மணம் புரிந்து கொண்டு வந்தனர் என்றும் ஆசிரியர் நச்சினுர்க்கினியர் கூறியுள்ளமை முன்னர் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது. கந்தபுராணத்துள் அகத்தியப் படலத்தில் இவ்வுலோபாமுத்திரையார் விதர்ப்பநாட்டு மன்னன் ஒருவனுடைய புதல்வியார் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இத்தகைய வேறுபாடுகள் எல்லாம் அவ்வரலாறுகளின்

பழமையையே வலியுறுத்துவனவாகும். காலஞ் செல்லச்செல்ல வரலாறுகள் சிறிது வேறுபட்டும் புனைந்துரை வகையாற் பெருகிக் கொண்டும் போதல் இயல்பேயாம்.

இனி, அகத்தியர்க்கு உலோபாமுத்திரையார்பால் மெய்யறிவு வாய்ந்த புதல்வர் ஒருவர் பிறந்தனர் என்றும் அவர்க்குச் சித்தர் என்னும் பெயரிடப்பெற்றது என்றும் கந்த புராணம் கூறுகின்றது. இச் செய்திகளை,

"அத்தனங் கொருவ அன்னான் அருளடைந் தங்கணீங்கி
மெய்த்தகு மதலைவேண்டி விதர்ப்பகோன் பயந்தலோபா
முத்திரை தனைமுன் வேட்டு முதுக்குறைத் திண்மை சான்ற
சித்தனை யளித்த வள்ளல் தென்றிசை நோக்கிச் சென்றான்."

என்ற கந்த புராணப் பாடலால் நன்கறியலாம்.

## 4. அகத்தியனார் தமிழ் நாட்டில் புரிந்த செயல்கள்.

பண்டைக்கால முதல் சோழவளநாடு 'சோறுடைத்து' என்று பாராட்டப் பெற்றுவருகின்றது. அதற்குக் காரணம், அந்நாடு வானம் பொய்ப்பினும் தான் பொய்யாத காவிரியால் வளம்பெற்றுச் சிறப்பெய்தி யிருப்பதுதான். அதுபற்றியே அந்நாடு காவிரிநாடு எனவும், பொன்னிநாடு எனவும் அறிஞர்களால் புகழப்பெற்றுளது. அத்தகைய பெருமை வாய்ந்த காவிரியாறு, அகத்தியர் தென்னாட்டிற்கு வந்து, மேற்குத் தொடர்ச்சிமலையாகிய மலையமலையில் தங்கி யிருந்த காலத்தில் காந்தன் என்ற ஒரு சோழமன்னன் வேண்டிக் கொண்டவாறு இம்முனிவரது அரும்பெரு முயற்சியினால்தான் வெட்டப்பெற்றது என்பது அறியற்பாலதாம். அகத்தியர் கங்கை யாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு வந்தார் என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியிருப்பது இவ்வரலாற்றையே குறிப்பாக உணர்த்துவதோடு தென்னாட்டில் ஓடுங் காவிரியாறு வடநாட்டிலுள்ள கங்கையைப்போல் பெருமையும் சிறப்பும் வாய்ந்தது என்பதை உறுதிப்படுத்துவதும் ஆகும். அன்றியும் புலவர் பெருமானாகிய மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் தாம் இயற்றிய மணிமேகலையில்,

"செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்குங்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
அமரமுனிவன் அகத்தியன் தனாது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை."

என்று இவ்வரலாற்றைச் சிறிது வேறுபடக் கூறியுள்ளமை நோக்கத் தக்கது. எனினும், அகத்திய முனிவர்க்கும் காவிரியாற்றிற்குமுள்ள தொடர்பை அவ்வாசிரியர் எடுத்துரைத்திருப்பது நினைவில் வைத்தற்குரியது.

பிறகு, இம்முனிவர் பெருமான் பாண்டிநாடு சென்று பாண்டி வேந்தர்க்குக் குலகுருவாக அமர்ந்தனர். இச் செய்தி, கி. பி.

பத்தாம் நூற்றுண்டில் மூன்றும் இராசசிம்ம பாண்டியன் ஆட்சிக் காலத்தில் வரையப்பெற்ற சின்னமனூர்ச் செப்பேடுகளின் வட மொழிப் பகுதியில் 'அகஸ்த்ய சிஷ்ய:' என்றும், தமிழ்ப் பகுதியில் 'பொருவருஞ்சீர் அகத்தியனைப் புரோகிதனுகப் பெற்றது' என்றும் குறிக்கப்பட்டுள்ளவற்ருல் நன்கு வெளியாகின்றது.

இறையனுர் அகப்பொருளுரையில் மேற்கோளாகக் காட்டப் பெற்ற பாண்டிக்கோவைப் பாடல் ஒன்று, உசிதன் என்ற பாண்டி வேந்தன் ஒருவன் அகத்தியர்பால் தமிழிலக்கணம் கேட்டனன் என்று உணர்த்துகின்றது. இதனை,

'அரைதரு மேகலை யன்னமன்னுயன் றகத்தியன்வாய்
உரைதரு தீந்தமிழ் கேட்டோ னுசிதன்'

என்னும் பாடற் பகுதியால் அறியலாம்.

இனி, வீரபாண்டியன் கல்வெட்டொன்று, பாண்டிமன்னன் ஒருவன் 'திடவாசகக் குறுமுனிபாற் செந்தமிழ்நூல் தெரிந் தருளினன்' என்று கூறுவது குறிப்பிடத்தக்கதாகும். அன்றியும் காளிதாசர் என்ற மாபெருங் கவிஞர், அகத்தியருடைய சிஷ்யன் பாண்டியன் எனத் தம் இரகுவமிசத்தில் கூறியுள்ளார் என்று தெரிகிறது.

இவற்ருல் அகத்தியர்க்கும் பாண்டியர்க்குமுள்ள தொடர்பினைத் தமிழ் நூல்களும், வடமொழி நூல்களும் கல்வெட்டுக்களும் செப் பேடுகளும் நன்கு விளக்கி நிற்றல் காண்க.

இனி, இம்முனிவர்பிரான் தலைச்சங்கப் புலவருள் ஒருவரா யமர்ந்து தமிழ் ஆராய்ந்தனர் என்று இறையனுரகப் பொருளுரை அறிவிக்கின்றது. அவ்வுரையிற் காணப்படும் தலைச்சங்க வரலாறு, 'தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூவகைப்பட்ட சங்கம் இரீஇயனுர் பாண்டியர்கள். அவருள், தலைச்சங்கமிருந்தார் அகத்தியனுரும், திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும், குன்றெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகனுரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினர் என்ப. அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாட லும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரியும் என இத்தொடக் கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்க மிருந்தாரென்ப. அவர்களைச் சங்கம் இரீஇயனுர் காய்சினவழுதி முதலாகக் கடுங்கோன் ஈருக எண்பத்தொன்பதின்மர் என்ப. அவ ருட் கவியரங்கேறினர் எழுவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரை என்ப. அவர்க்கு நூல் அகத்தியம் என்பதாம். இதிற்கண்ட செய்திகள் நம் அறிவாற் றலுக்கு அப்பாற்பட்டு நிற்றலின் இவற்றை ஆராய்ந்து முடிவு கூறுதல் எளிதன்று. எனினும், பாண்டிவேந்தர்கள் தம் தலைநக ரில் நிறுவி நடத்திவந்த தமிழ்க் கழகத்தில் அகத்தியனுர் முதற்

புலவராயமர்ந்து தமிழாராய்ந்தனர் என்பதும் இவர் இயற்றிய அகத்தியம் என்னும் நூல் அக்கழகத்தார்க்கு இலக்கண நூலாக இருந்தது என்பதும் நன்கு துணியப்படும்.

## 5. அகத்தியனாரின் மாணவர்கள்.

அகத்தியர் புலவர்களுடன் தமிழாராய்ச்சி செய்தமையோடு மாணவர் பலர்க்கும் தமிழ் அறிவுறுத்தினார். இம்முனிவரிடத்து இயற்றமிழ் நூல் கேட்ட மாணவர் பன்னிருவர் ஆவர். அவர்கள், தொல்காப்பியனார், அதங்கோட்டாசான், துராலிங்கனார், செம்பூட் சேய், வையாபிகனார், வாய்ப்பியனார், பனம்பாரனார், கழாரம்பனார், அவிநயனார், காக்கைபாடினியார், நற்றத்தனார், வாமனனார் என் போர். இன்னோர் பன்னிருவரும் தனித்தனி நூல் இயற்றியமை யோடு எல்லோருஞ் சேர்ந்து புறப்பொருள் பன்னிருபடலம் என்னும் நூல் ஒன்று இயற்றியுள்ளனர் என்றும் தெரிகிறது. இதனை,

'மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலையிருந்த சீர்சால் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப்பியன்முதல்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலம் பழிப்பின் றுணர்ந்தோன்'

என்ற புறப்பொருள் வெண்பாமாலைப்பாயிரத்தினால் நன்குண ரலாம். அந்நூல் இந்நாளில் யாண்டும் கிடைக்காமையால் அழிந்து போயிற்று என்பது ஒருதலை. எனினும், அதன் வழிநூலாக இக் காலத்தில் கிடைத்திருப்பது, சேரமன்னராகிய ஐயனாரிதனார் என்பார் இயற்றிய புறப்பொருள் வெண்பாமாலை என்னும் அரிய நூலேயாம். மேலே குறிப்பிட்டுள்ள மாணவர் பன்னிருவருள், தொல்காப்பியனார் இயற்றிய தொல்காப்பியம் என்னும் நூல் ஒன்றுதான் இந்நாளில் உளது. மற்றையோர் எழுதிய நூல்கள் கிடைக்கவில்லை. எனவே இப்போதுள்ள நூல்களுள் இத் தொல்காப்பியமே மிகப் பழமை வாய்ந்தது என்று கூறலாம். இந்நூலுக்குச் சிறப்புப்பாயிரம் இயற் றியவர், அகத்தியரின் மாணவருள் ஒருவரும் தொல்காப்பியனாரின் ஒருசாலை மாணவரும் ஆகிய பனம்பாரனார் ஆவர்.

இனி, ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தின் உரைப்பாயிரத்தில் 'தேவ இருடியாகிய குறுமுனிபாற்கேட்ட மாணாக்கர் பன்னிருவருள் சிகண்டி என்னும் அருந்தவமுனி........ ......செய்த இசைநுணுக்கமும்' என்று அடியார்க்கு நல்லார் கூறி யுள்ளமையால் அகத்தியருடை மாணாக்கருள் சிகண்டியார் என்பவர் ஒருவர் என்பதும் அவர் 'இசை நுணுக்கம்' என்னும் இசைத்தமிழ் இலக்கணம் ஒன்று இயற்றியவர் என்பதும் தெள்ளிதிற் புலனா கின்றன. பிற ஆசிரியர்கள் கூறியுள்ள அகத்தியர் மாணவர் பன்னிருவருள் சிகண்டியார் பெயர் காணப்படவில்லை. ஆகவே

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகிய மூன்றுக்கும் வெவ்வேருகப் பன்னிரண்டு மாணுக்கர்கள் இருந்திருத்தல் வேண்டும் என்று எண்ணுதற்கு இடம் உளது. அன்றியும், இம்முனிவர் பெருமான்பால் மருத்துவம், சோதிடம், முதலானவற்றைக் கற்ற மாணவர் பலர் இருந்தனர் என்று பெரியோர்கள் கூறுகின்றனர். இவர் சித்தர் கூட்டத்திற்குத் தலைவராக இருந்தனர் என்றும் தெரிகிறது. எனவே, தமிழ் நாட்டில் சித்தர் மருத்துவமும் சோதிடக் கலையும் இம்முனிவராலும் இவரது மாணவராலும் யாண்டும் பரவி வளர்ச்சியெய்தி வந்தமை குறிப்பிடத் தக்கதொரு நிகழ்ச்சியாகும்.

## 6. அகத்தியனுரது சமயக் கொள்கை.

இம் முனிவர்பிரான் சிவபெருமானையே முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபாடு புரிந்துள்ளமைக்கு நம் தமிழகத்தில் எத்துணையோ ஆதாரங்கள் கிடைக்கின்றன. சிவபெருமானிடத்தும் முருகவேள்பாலும் இவர் தமிழ் இலக்கணம் கற்றனர் என்று தொன்னூல்கள் கூறுஞ்செய்தி முன்னர் விளக்கப்பட்டுளது. தென்பாண்டி நாட்டிலுள்ள திருக்குற்ருலத்தில் திருமால் வடிவத்தைச் சிவலிங்கமாக்கி இவர் வழிபட்டனர் என்பது பண்டைநாள் முதல் வழங்கிவரும் ஒரு வரலாறு ஆகும். இச்செயலால் இவரது சிவபத்தியின் மாண்பு எத்தகையது என்பது இனிது புலப்படுதல் காண்க. வேதாரண்யம் என்று வழங்கும் திருமறைக்காட்டிற்கு அண்மையில் அகத்தியான் பள்ளி என்னும் சிவஸ்தலம் ஒன்றுளது. அது, சைவசமயகுரவராகிய திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற பெருமையுடையதாகும். திருமறைக்காட்டில் சிவபெருமானது திருமணக் கோலத்தைத் தரிசிக்க வந்த அகத்தியனுர் தங்கியிருந்த இடமாதல்பற்றி அத்திருப்பதி அகத்தியான்பள்ளி என்ற பெயர் பெற்றது என்று பெரியோர்கள் கூறுகின்றனர். அங்கு அகத்தியர் திருவுருவமும் இருத்தல் அறியத்தக்கது. பொதியின்மலையிலும் சிவபெருமானது திருமணக்கோலத்தை ஒருமுறை இவர் தரிசித்தனர் என்று சொல்லப்படுகிறது. அதற்கேற்பப் பொதியின்மலையிலும் அகத்தியாச்சிரமம் என்ற பெயருடன் ஒரு கோயிலும் உளது. தமிழ் நாட்டில் பல சிவன் கோயில்களில் அகத்தியர் வந்து வழிபட்ட வரலாறுகள் ஆங்காங்குக் கூறப்படுகின்றன. அவ்விடங்களில் அகத்தியர் திருவுருவங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. கி. பி. ஏழாம் நூற்ருண்டின் இறுதியில் காஞ்சிமாநகரில் பல்லவ மன்னனுகிய **இரண்டாம் நரசிம்மவர்மனுல்** எடுப்பிக்கப்பெற்ற கைலாயநாதர் ஆலயத்தின் **தெற்குப்பிரகாரத்தில்** உள்ள **அகத்தியர் கோயிலே தமிழ் நாட்டு அகத்தியர் கோயில்களுள்** பழமை வாய்ந்ததாகும். ஆகவே, இவரது திருவுருவம் சிவாலயங்களில் எழுந்தருளிவித்து வழிபாடு செய்யப்பட்டிருத்தல் ஒன்றே இவரது சிவபக்தியையும் பெருமையையும் நன்கு புலப்படுத்தும் எனலாம்.

இனி, சைவ சமயாசாரியருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திகள், சிவபெருமான் அகத்தியர்க்கு அருள்புரிந்த சிறப்பைத் திருநின்றி யூர்ப் பதிகத்திலுள்ள ஒரு பாடலில் கூறியுள்ளனர். அது,

"வந்தோ ரிந்திரன் வழிபட மகிழ்ந்து
வான நாடுநீ யாள்கென அருளிச்
சந்திமூன்றிலுந் தாபர நிறுத்திச்
சகளி செய்திறைஞ் சகத்தியர் தமக்குச்
சிந்து மாமணி யணிதிருப் பொதியிற்
சேர்வு நல்கிய செல்வங்கண் டடைந்தேன்
செந்தண் மாமலர்த் திருமகள் மருவுஞ்
செல்வத் தென்றிரு நின்றியூ ரானே."

என்பதாம்.

## 7. அகத்தியனுர் இயற்றிய அகத்தியம் என்னும் நூலைப்பற்றிய சில குறிப்புகள் :

இம் முனிவர்பிரான் இயற்றிய 'அகத்தியம்' என்ற நூல் இப்போது காணப்படவில்லை. எனவே அந்நூல் ஒன்று இருந்ததோ இல்லையோ என்ற ஐயப்பாடு நிகழ்வது இயல்பேயாம். ஆனுல் அந் நூல், தலை இடை கடை என்னும் மூன்று சங்கத்தார்க்கும் இலக்கண நூலாயிருந்ததென்று இறையனுரகப்பொருளுரை கூறுகின்றது. இடைச் சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் இலக்கண நூலா யிருந்தது என்று அவ்வுரை கூறுகின்ற தொல்காப்பியம் இப்போதும் இருப்பது யாவரும் அறிந்ததேயாம். அவ்வாறிருக்க, அவ்வுரையால் அறியப்படும் அகத்தியம் என்னும் நூல் இப்போதில்லாமையால் முன்பும் இருந்திலது என்று கூறுவது சிறிதும் பொருந்தாது. தொல்காப்பியத்திற்கு உரைகண்ட ஆசிரியர் பலரும் தம் உரைகளில் அகத்தியத்தைக் குறிப்பிட்டுள்ளனர். யாப்பருங்கலவிருத்தியிலும் நன்னூல் மயிலைநாதர் உரையிலும், அந்நூல் கூறப்பட்டிருக்கின்றது. அன்றியும், அவ்வுரையாசியர் எல்லோரும் தம் உரைகளில் பல அகத்தியச் சூத்திரங்களை மேற்கோள்களாக எடுத்துக் காட்டியுள் ளனர். புறப் பொருள் பன்னிரு படலப்பாயிரமும்,

வீங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவிளக் காகென
வானேர் ஏத்தும் வாய்மொழிப் பல்புகழ்
ஆனப் பெருமை அகத்திய னென்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்'

என்று அகத்தியத்தைக் குறிப்பிடுவது உணரற்பாலதாகும். எனவே, அந்நூல் முற்காலத்தில் வழங்கிவந்தமை தெள்ளிதிற் புலனுதல் காண்க.

இனி, தொல்காப்பிய வுவமை யியல் இறுதிச் சூத்திரத்தின் உரையில், 'அகத்தியனாற் செய்யப்பட்ட மூன்று தமிழினும்' என்று பேராசிரியர் கூறியிருப்பதால், அந்நூல், இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழ்க்கும் இலக்கணமாயிருந்தது என்பது நன்கு பெறப்படும் அன்றியும், சிலப்பதிகார உரைப்பாயிரத்தில், 'நாடகத் தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம் முதலாயுள்ள தொன்னூல்களும் இறந்தன' என்று அடியார்க்கு நல்லார் உரைத்திருப்பதால் அவ்வுண்மை வலியுறுதல் காண்க. அகத்தியர்பால் இசைத் தமிழ் கற்ற சிகண்டியார் என்பார் 'இசை நுணுக்கம்' என்னும் நூல் எழுதியுள்ளனர் என்பது முன்னர் விளக்கப்பெற்றது. ஆகவே, அகத்தியனார் முத்தமிழிலும் புலமையுடையவர் என்பது வெளிப்படை. எனவே, இம்முனிவர் இயற்றிய அகத்தியம் என்னும் நூல் இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழ்க்கும் இலக்கணம் என்பது நன்கு துணியப்படும்.

## 8. அகத்தியனாரும் கீழ்நாடுகளும்.

இந்தியாவிற்குக் கிழக்கேயுள்ள காம்போசம் (கம்போடியா) இந்துசீனம், ஜாவா என்ற நாடுகளில் அகத்தியரைப்பற்றிய செய்திகள் கிடைத்தலால் அந்நாடுகளுக்கும் இம்முனிவர்க்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருத்தல் வேண்டும் என்பது நன்கறியக் கிடக்கின்றது. கி. பி. 732-ஆம் ஆண்டில் சஞ்சயன் என்ற வேந்தன் ஒருவன் ஜாவாவிலுள்ள ஒரு குன்றின் உச்சியில் சிவாலயம் ஒன்று உலகிற்கு நலமுண்டாகுமாறு கட்டினான் என்று அந்நாட்டிற் காணப்படும் ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. ஜாவாவில் ஏற்பட்ட சிவவழிபாடு குஞ்சரகுஞ்ச நாட்டிலிருந்து வந்தது என்று அக் கல்வெட்டு அறிவிக்கின்றது. குஞ்சரகுஞ்சநாடு என்பது பாண்டிநாடு என்றும் அந்நாட்டிலிருந்த அகத்திய முனிவரே ஜாவாவில் சிவவழி பாட்டையுண்டுபண்ணியவர் என்றும் பிறகு அந்நாட்டரசர்கள் சிவன் கோயில்கள் கட்டத் தொடங்கினர் என்றும் ஆராய்ச்சியில் வல்ல அறிஞர்கள் கூறுகின்றனர். கி. பி. 760-ல் ஜாவாவில் ஆட்சிபுரிந்து கொண்டிருந்த ஓர் அரசன் அகத்தியருக்குக் கோயில் ஒன்று கட்டி அதில் இம்முனிவருடைய கருங்கற்படிமத்தை எழுந்தருளிவித்தான் என்று உணர்த்துவதோடு அங்கு இவரது மரப்படிமம் ஒன்று முன்னர் இருந்ததென்றும் கூறுகின்றது. ஆகவே ஜாவாவில் சிவன் கோயில்களும் அகத்தியர் கோயில்களும் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் சிறப்புற்றிருந்தன என்பதும், அவற்றை அந்நாட்டு வேந்தர்கள் பெரிதும் போற்றி வந்தனர் என்பதும் கல்வெட்டுக்களால் நன்கு வெளியாகின்றன. கி. பி. 889-ல் காம்போச நாட்டில் வரையப்பெற்ற கல்வெட்டொன்று, அந்நாட்டு மன்னர்களின் முன்னோருள் அகத்தியர் ஒருவர் என்றும் இவர் காம்போச மன்னனுடைய மகள் யசோமதியை மணந்தனர் என்றும் இவ்விருவர்க்கும் பிறந்த புதல்வனே நரேந்திரவர்மன் என்ற அரசகுமாரன் என்றும் கூறுகின்றன. அந்நாட்டிலுள்ள மற்றொரு கல்வெட்டு அந்நாட்டைப்

பலவகையாலும், சீர்திருத்தி உயர்நிலைக்குக்கொணர்ந்தவர் அகத்தியரே என்றும் இவர் அங்கு இரண்டு சிவன்கோயில்கள் கட்டுவித்தார் என்றும் இவர் தம் மாணக்கரை அந்நாட்டிற்குக் குருவாக அமர்த்திவிட்டு அதனைவிட்டுப் புறப்பட்டார் என்றும் உணர்த்துகின்றது. இங்ஙனமே இந்துசீனம், மலேயா என்ற நாடுகளிலும் அகத்தியர் சிவவழிபாட்டை ஏற்படுத்தியதோடு அந்நாடுகளை நாகரிக நிலையில் அமையச்செய்தனர் என்று தெரிகிறது. எனவே, பாண்டிநாட்டிலிருந்து புறப்பட்டுக் கடலைக் கடந்து கிழக்கே சென்று ஜாவா, காம்போசம், இந்துசீனம், மலேயா ஆகிய நாடுகளில் தங்கிப் பல சீர்திருத்தங்கள் செய்து, அந்நாடுகளை உயர்நிலைக்குக் கொணர்ந்தவர் அகத்தியரே என்பது அந்நாடுகளில் கிடைக்கும் பல ஆதாரங்களால் தெளிவாகப் புலப்படுகின்றது. காம்போச நாட்டுக் கல்வெட்டொன்று அகத்தியரைக் கடலை வென்றவர் என்று கூறுவதற்குக் காரணம் இவர் கடக்க முடியாத கடலைக் கடந்து கீழ் நாடுகட்குச் சென்றமையே என்பது அறியற்பாலது.

---

## துயரம்.

மதுரை அமெரிக்கன் கல்லூரி முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் செந்நாப் புலவர் திரு. ஆ. கார்மேகக்கோனாரவர்கள் 22-10-57ல் இவ்வுலக வாழ்வை ஒருவிய செய்தியறிந்து நெஞ்சம் அலமருகின்றோம். என் செய்வாம்! பேர் யாற்று நீர் வழிப்படூஉம் புணை போல ஆருயிர் முறைவழிப்படும்.

செய்யுளியற்றல், உரையெழுதுதல், விரிவுரையாற்றல், நூலாக்குதல் முதலிய புலமைக் கூறுகள் பலவும் நிரம்பிய பேராசிரியர் கோனாரவர்கள் சமயப் பற்றுமிக்குடையவர்; சிறிதும் ஆரவாரமில்லாதவர்; மாணவர்கள் உளங்கொளப் பயிற்றுவிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். தம்பாற் பயிலும் மாணவர்களின் நல்வாழ்வில் மிகுந்த அக்கரை கொண்டு, அவர்களைச் செந்நெறியிற் செலுத்தும் சீரியர்.

இவர் சென்னைப் பல்கலைக் கழகப் பாடத்திட்டக் குழுவில் 21 ஆண்டுகள் உறுப்பினராயிருந்து அருந் தொண்டாற்றியவர். அன்றியும், சென்னை, அண்ணாமலை, திருவாங்கூர் பல்கலைக் கழகங்களில் தேர்வாளர் குழுவில் உறுப்பினராகவும், சென்னைப் பல்கலைக் கழகக் கல்விக்குழு, மதுரைச் சங்கத் தேர்வுக்குழு, கல்விக்குழு இவைகளில் பல ஆண்டுகள் உறுப்பினராயிருந்து தமிழ் மொழியின் ஆக்கமே நோக்கமாக உளங்கொண்டுழைத்த உரவோர்.

இவர்கள் தம் நுண்மாணுழைபுலனால் கற்றுணர்ந்த பல நல்ல கருத்துக்களையும், அறிவு நலங்களையும், பிறர்க்கு உணர்த்த விழைந்த நன்னோக்கமே, மலைபடுகடாஅம், திருவள்ளுவரும் திருக்குறளும, புறப்பொருள் வெண்பாமாலை முதலிய ஆராய்ச்சி நூல்களாக உருக்கொண்டது. அன்றியும் நல்லிசைப் புலவர்கள்,

சென்ற இதழின் தொடர்ச்சி.

ஓர் மதிப்புரை.

## * கங்காதேவி எழுதிய மதுரா விஜயம்.

[ நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர். ]

குலசேகரச் சம்புவராயன், தான் தனி அரசன் என்பதைக் காட்டக் காலத்தைக் குறிப்பிடுவதற்குத் தன் ஆட்சி ஆண்டைக் கணக்கிட்டுக் குறிப்பதை மேற்கொண்டான். இவனுக்குப்பின் வந்த வீர சம்புவராயன் தன் மரபின் தனியரசைக் காட்டுவதற்கு முதன் முதலாக நாணயங்களைத் தனியாக அடித்துத் தன் நாட்டிலும் அருகிலுள்ள அயல்நாட்டுப் பகுதிகளிலும் செல்லச் செய்தான். இந்த நாணயங்கள் வீரசம்பன் குளிகை என்று பேசப்படுகின்றன.

வீரசம்பன் காலத்தில் இந்தியா முழுவதுமே பெருங் கலக்கத்தில் இருந்தது. வட இந்தியாவில் தில்லியைத் தலைநகராகக்கொண்ட துருக்க மன்னர்களுள் அலாவுதீன் என்பவன் 450000 துருக்க வீரர்களைக்கொண்ட ஒரு நிலைப் படையை வைத்துக்கொண்டு எண்ணியபோது எண்ணிய இந்திய அரசர்களையும், நாட்டையும், மக்களையும் அடியோடு அழிக்கும் கொடுமையும் வன்மையும் கொண்டவனாகக் கொடுங்கோல் செலுத்தி வந்தான்; அவனுடைய படைத் தலைவர்களில் மாலிக்காபூர் என்பவன் தமிழ் நாட்டில் புகுந்து கோயில்களை அழித்தும் மக்களை வெட்டி வீழ்த்தியும் நாட்டைத் தீக்கு இரையாக்கியும் நாட்டை நடுங்கச்செய்து பெரும் பொருள்களைக் கொள்ளைகொண்டும்

---

(234ஆம் பக்கத்தொடர்ச்சி.)

கண்ணகிதேவி, ஆபுத்திரன் வரலாறு, காப்பியக் கதைகள், தமிழ் மொழியின் மறுமலர்ச்சி முதலிய நூல்கள் பேராசிரியர் கோனாரவர்களின் சங்கநூற் பயிற்சியையும் பரந்த அறிவையும் காட்டுகின்றன.

இப்பெரியாருக்கு மதுரை திருவள்ளுவர் கழகத்தார் "செந்நாப் புலவர்" என்னும் சிறப்புப் பெயர் தந்து பாராட்டினர். இவர்கள் பிரிவால் வருந்தும் குடும்பத்தாருக்கு நமது துயரத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இவர்கள் இன்னுயிர் இறையடி நீழலில்
இன்பம் துய்ப்பதாகுக!

பொழிற்றொண்டர்.

---

* மதுராவிஜயம் — வடமொழிநூல் — கங்காதேவி இயற்றியது. ஆங்கில மொழி பெயர்ப்பு. பதிப்பாசிரியர் திரு S. திருவேங்கடாச்சாரியர் — அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வெளியீடு.

தில்லிக்குத் திரும்பினான். அவன் இங்கு வைத்துப்போன படைகள் பலவாறு மக்களைத் துன்புறுத்துவனவாயின. சோழர் பேரரசு அடியோடு தொலைந்தது. பாண்டியர்கள் குற்றுயிரும் குறையுயிருமாக அங்குமிங்கும் பறந்துகொண்டிருந்தனர். ஒருபுறம் போசலப் பேரரசன் வீரவல்லாளன் தன்னை வலுப்படுத்திக் கொண்டிருந்தான்; மற்றொருபுரம் காகத்திய மன்னன் பிரதாபருத்திரன் என்றும் துருக்க மன்னனால் வரக்கூடிய தீங்கை எதிர்பார்த்து நின்றுகொண்டிருந்தான். கி. பி. 1308 வரையில் குலசேகர பாண்டியன், சோழநாடும், பாண்டிய நாடும், தொண்டைமண்டலமும் தன் பேராட்சியிலிருப்பதாகவே காட்டி வந்தான். அவன் மறைந்தவுடன் (கி. பி. 1310) அவன் மக்கள் இருவரும் மாறுபடுவதும் மாலிக்காபூர் படையெடுப்பும் சேர்ந்து வந்தன. இக்குழப்பங்களால் நாடு நடுக்கமுற்றிருந்தபோது, சோழ நாட்டையும், பாண்டிய நாட்டையும், தன் ஆட்சிக்குக் கொண்டு வந்து தான் ஒரு பேரரசனாக ஆகவேண்டும் என்ற பேராசையால், கொல்லத்தைத் தலைநகராகக்கொண்டு திருவிதாங்கூரை ஆட்சி செய்த இரவிவர்மன் குலசேகரன் என்னும் சேர அரசன் ஒருவன் புறப்பட்டான். மிக எளிதாக, இவன் பாண்டிய சோழ நாடுகளைக் கடந்து காஞ்சிபுரம் சென்று அங்கிருந்த தெலுங்குச் சோழன் கண்டகோபாலனைத் துரத்திவிட்டுத் தான் பாண்டிய சோழர்களை வென்ற வீரனாகப் பெயர் செய்துகொண்டு கி. பி. 1312ல் காஞ்சிபுரத்தில் முடிசூட்டிக்கொண்டான்; ஆனால், நெடுநாள் நிலைக்கவில்லை. கி. பி. 1316ல் பிரதாபருத்திரனின் படைத் தலைவன் முப்பிடி நாயக்கன் என்பவன் இரவிவர்மனைக் காஞ்சிபுரத்திலிருந்து துரத்திவிட்டு அந்நகரைக் காகத்திய அரசில் சேர்த்து அதன் ஆட்சிக் காவலனாக முன்பு அரசு செலுத்திய கண்டகோபாலனையே 'மானவீரன்' என்னும் பட்டப் பெயரோடு அங்கு அமர்த்தினான். வீர சம்புவராயன் இவ்வளவு குழப்பமான நிகழ்ச்சிகளின் இடையில் காலத்துக்கேற்றவாறு தலையைசாய்த்துக்கொண்டுதான் தனியரசு செலுத்தியிருக்கவேண்டும். இவனுடைய தலைநகரமாகிய காஞ்சி இவ்வளவு மாறுபாடுகளுக்கு உள்ளாகியிருக்கிறது; துருக்கர்களால் ஏற்பட்ட இடையூறுகளும் சில பகுதிகளிலேனும் அமைதியைக் கெடுத்திருக்க வேண்டும். என்றாலும், அருகிலிருந்த வன்மையுடைய அரசரெல்லாம் துருக்கருக்கு அஞ்சி, தங்கள் தங்கள் வேலைகளிலேயே கருத்தாக இருந்தமையின், இவன் தனியரசு ஒருவாறு நின்றுகொண்டிருந்தது என நாம் எண்ணவேண்டும். திருவண்ணாமலையிலுள்ள கி. பி. 1342 ஆகஸ்டு 23ஆம் நாள் பொறிக்கப் பெற்ற கல்வெட்டு ஒன்றில் 'அரசிழந்த சோழர் குடியினனான

திரிபுவன வீரசோழன்' எனக் குறிப்பிடப்பெறும் சோழன், வீரசம்புவராயனுடைய ஆதரவில் சில காலம் இருந்திருக்கக் கூடுமோ என்றும் எண்ணவேண்டியிருக்கிறது.

வீர சம்புவராயன் தெய்வத் திருப்பணிகள் பல செய்திருக்கின்றான். காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதருக்கு மணிமகுடமும் செய்துகொடுத்திருக்கிறான். மண்டபம் ஒன்றும் கட்டியிருக்கின்றான். இதை, இரட்டையர் ஏகாம்பரநாதர் உலாவில்,

"சம்புகுலத்து ஒருவன் சாத்துகைக்கு ஆம் என்று அளித்த
செம்பொன் மணி மகுடம்" என்றும்

"தத்துபரி பல்லவன் சம்புகுலப் பெருமான்
வைத்த துலாபார மண்டபம்" என்றும் பாராட்டியிருக்கின்றார்.

"வடித்த சுடர்வேல் சம்பன் வாழ் மல்லிநாதன்
கொடுத்த திருத்தேர்" எனவும்.

"செம்பதுமை கேள்வன் திருமல்லிநாதன் உயர்
சம்புபதி நல்கும் தடந்தேர்" எனவும், தேர் கொடுத்ததாகப் பாராட்டப்பெறும் 'சம்பன்' இவனே அன்றிப் பின்னேருள் ஒருவனே என்பது ஆராயவேண்டும். இவனுடைய ஆட்சிக்காலமாகிய சகம் 1236ல் வீரசோழன் பிள்ளை சம்பன் அத்தியூர் கடவுளுக்கு ஒரு புதிய பூசத் திருநாள் இரதம் கொடுத்தான் எனக் கூறும் வடமொழிச் செய்யுளும் இங்கு கருதத் தக்கது.

வீர சம்புவராயன் காலத்தில் பெரும் வள்ளலாக, கூவராயன் என்பவன் ஒருவன் இரட்டையருக்குப் புரவலனாக இருந்திருக்கின்றான். அவன் புகழைப் பாராட்டியும் அவனைப் பெருமைப் படுத்தியும், வீர சம்புவராயன் முன்னிலையில் இரட்டையர் பாடியனவாக இரண்டு வெண்பா காணப்பெறுகின்றன; அவை—

"கூவராயன் தியாகங் கொள்வோம் வலக்கைமுடி
யாவர் தரினும் இடக் கைகொள்வோம்—பூவுலகில்
மின்பணி மின்னர் மதன வீரசம்பராயா நாம்
இன்பமு நேரோ மினி"

"மாதா பிதாவுமவன் மன்னுகுரு தெய்வமவன்
தாதா வவனே தருங்கீர்த்திக்—காதாரன்
தியாக சமுத்திரன் தண்கூவ ராயன்றன்
ஈகைதனைச் சொல்லவெளி தே" என்பனவையே.

வீரசம்புவராயனுக்குப் பின்னர் ஏகாம்பரநாதச் சம்புவராயன் “வென்று மண்கொண்டான்” என்னும் சிறப்புப் பெயருடன் கி. பி. 1332 மே 11க்குமேல் ஜூன் 20க்குள் முடிசூடி அரசனாயினன். அவன் ஆட்சித் தொடக்கத்தில், காஞ்சிபுரத்தைக் கைப்பற்றியிருந்த காகத்திய அரசின் வலுக்குறைந்துவிட்டபடியால் எளிதாக அவர்களை வென்று காஞ்சிபுரத்தைத் தன் அரசில் சேர்த்துவிட்டான். இவ்வாறு வென்று தன் தலைநகரை மீட்டபடியால் ‘வென்று மண்கொண்டான்’ என்னும் சிறப்புக்கு உரியவனானன். இவன் காலத்தில் தென்னாடு முழுவதும் தில்லித்துருக்கர் ஆட்சிக்கு உள்ளாகி நடுக்கமுற்றது; தொண்டைநாடும் துன்புற்றது; இவனும் ஒன்றும் செய்ய ஆற்றலிலாது ஒடுங்கிநின்றான். தில்லித்துருக்கரின் ஆட்சிக் காவலாக மதுரையிலிருந்த துருக்கர் தில்லியின் தொடர்பைவிட்டுத் தனியரசாக மதுரைச் சுலுத்தான்கள் என்ற பெயருடன் கி. பி. 1330ல் மாறினார்கள். இவர்கள் தங்கள் கொடுங்கோலாட்சியை மதுரைக்கு அருகிலுள்ள பாண்டிய சோழ நாடுகளில் வன்மையாக வைத்துக்கொண்டு வட பகுதியாகிய தொண்டைமண்டலமான சம்புவராயர் நாடு தொலைவிலிருந்தமையால் நெருக்காமல் விட்டுவிட்டார்கள். தொல்லை நீங்கியவுடன் ஏகாம்பரநாதச் சம்புவராயன் பலவழிகளிலும் நாட்டை வளப்படுத்தி மக்களுக்கு நன்மையைச் செய்தான். மற்றப் பகுதிகளில் துருக்கர்களால் நசுக்குண்ட மக்கள் பலரும் இவன் நாட்டை அடைந்தார்கள். அஞ்சி வந்தவர்களுக்கெல்லாம் ஆதரவு அளித்தான். கோயில்களையும் மடவிளாகங்களையும் நீர் நிலைகளையும் பல இடங்களிலும் சீர் செய்தான். பிற நாட்டிலிருந்து வரும் குடிகள் தங்குவதற்காகப் பல ஊர்களை அமைத்து அவைகளுக்கு ‘அஞ்சினான் புகலிடம்’ எனப் பெயர் கொடுத்தான். அடைக்கலம் புகுந்த குடிமக்களை மிகவும் அன்பாக நடத்தினான். எல்லா வரிகளையும் எவ்வளவு குறைவாக விதிக்கக்கூடுமோ அவ்வளவு குறைவாக விதித்தான். நாடு நலம் பெற்றது; மக்கள் குடியேறினார்கள்; கைத்தொழில் வளர்ந்தது; பசியும் பிணியும் நீங்கியது; தெய்வ வழிபாட்டிலும் நல்ல பொழுதுபோக்கிலும் மக்களுடைய நாட்டம் திரும்பியது; துருக்கர்களால் இவன் நாட்டில் நேர்ந்த அழிவுகளெல்லாம் சிறுகச் சிறுக சீர்திருத்தம் பெற்றுப் பழைய நல்நிலையை நாடு அடைந்தது. இவனுடைய காலத்தில் சோழர்களோடு சம்புவராயர்களுக்கு முன் இருந்த தொடர்பின் நினைவு மறையாமலிருந்திருக்கலாம் என்று, இவனை இரட்டையர் “எறிக்கும் புகழ்க் கச்சி ஏகாம்பரன் சம்பன் எண்டிசைக்கும் பொறிக்கும் புலிக்கொடியான்” எனக் கூறுவதால் எண்ண

வேண்டியிருக்கிறது. பாண்டியர்களுக்கும் இவனுக்கும் ஏதேனும் போரோ (சிறு அளவில்) அல்லது போர்ப்பேச்சோ நிகழ்ந்திருக்கக் கூடுமோ என எண்ணுவதற்கு,

"காற்றால் அலைப்புண்டும் கண்ணன் கடல் கடைந்தும்
ஏற்றான் எடுத்து வளைத்து எய்து இளைத்தும்—ஆற்றாத
செம்பொன் மலையன்று சேனுக்கு இடங்கொடுக்கச்
சம்பன் மலை கைதவா" என்னும் இரட்டையர் வெண்பாக்களுள் ஒன்று இடந்தருகிறது.

ஏகாம்பரச் சம்புவராயனுக்குப் பின்னர் அவன் மகன் இராஜ நாராயண சம்புவராயன் கி. பி. 1339ல் பட்டத்துக்கு வந்தான். சம்புவராயர்களுள் இவனையே சிறந்தவனாகக்கொள்ள வேண்டும். இவன் நாடும், வடவாற்காடு, செங்கற்பட்டு, தென்னாற்காட்டின் வட பகுதி முதலியவைகளைக்கொண்டு விரிவாக இருந்தது. இவனுக்கு "சகலலோகச் சக்கரவர்த்தி" "பொன்னின் தம்பிரான்" முதலிய சிறப்புப் பெயர்களும் விளங்கின.

விண்ணுலகடைந்த தன் தந்தைக்குச் செய்யவேண்டிய கடன் முறைகளை விதிப்படி செய்து என்பினைக் கங்கையாற்றுக்குக் கொண்டுபோய் விட்டு கயாவில் சிரார்த்தம் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். என்பினைக் கங்கைக்கு எடுத்துச் சென்றவன் இவன் அரண்மனைக் காவலர்களாகிய ஆகம்படிய முதலியார்களுள் ஒருவன்; கங்கையாடித் திரும்பியபின், இவன் "எனும்போடு கங்கையாடி மாதவராயன்" என அழைக்கப் பெற்றான்; இவனுக்குக் கங்காமான விர்த்தியாகக் குட்டியம் என்னும் ஊரை இராஜ நாராயணநல்லூர் எனப் பெயரைமாற்றி இறையிலியாக அளிக்கப்பெற்றது; இவனும் காலஞ்சென்ற அரசனிடத்தில் மிகவும் நன்றியுடையவனானபடியால் தான் இறையிலியாகப் பெற்ற ஊரில் ஏகாம்பரநாதன் பெயரில் கோயில் எடுப்பித்து நிலங்களும் கொடுத்தான். தன் தந்தையை ஒப்ப இவன் பல நன்மைகளைத் தன் நாட்டிற்குச் செய்தான். ஒரு பெரு வெள்ளத்தால் பயிர்கள் அழிந்தபோது நிலவரியை வாங்காமல் விட்டுவிட்டான். நாட்டில் பசி, பிணி நீங்கி யிருந்தமையால் மக்களுக்குள் அவரவர்கள் உரிமையையும் சிறப்பையும் பற்றிய வழக்குகளும் தோன்றின. ஒரு பாசன வழக்கு இரண்டு கிராமத்தாருக்குள் வந்து தீர்க்கப்பெற்றது. கோயிற் பணியாளர்களில் 'இசைப் பாட்டாளியார்', 'தேவராடியார்', 'பதியிலார்' என்னும் மூன்று பகுதியினருள் எவர் முதன்மையுடையவர் என ஒரு வழக்கு வந்தது. கைத்தொழிலும் வாணிகமும் சிறப்புற்றிருந்தது. தன் நாட்டு வாணிகத்தைப் பெருக்குவதற்

காகத் துறைமுகப்பட்டினம் ஒன்றை நன்ருக வளப்படுத்திஞன்; அதுதான் இப்போது செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள சதுரங்கப்பட்டினம் என்பது; அதற்கு அவன் காலத்திய பெயர் 'இராஜ நாராயணப்பட்டினம்' என்பது.

பிறப்பினுலும் கொள்கையினுலும் சைவ சமயத்தவனுகிய இவன் எல்லாச் சமயங்களேயும் வேற்றுமையின்றி ஆதரித்தான். மாமல்லபுரத்திலுள்ள ஸ்தல சயனப்பெருமாள் என இப்போது வழங்கப்பெறுவதும் அவன் காலத்தில் உலகளந்தபெருமாள் என வழங்கப்பெற்றதுமான பெருமாள் கோயிலுக்குப் பல நிபந்தங்கள் விட்டான். சமணர் கோயில்களுக்கும் பல உதவி செய்திருக்கிருன். இவர்கள் மரபே பிற சமயத்தில் வேற்றுமை கொள்ளாததெனக் கூறலாம். கோயில் திருப்பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு அவரவர் தனித்த நிலேயில் கொடுக்கவேண்டிய தான வரிகளேத் தள்ளிக் கொடுத்திருக்கிருன். மாதேவிமங்கலத்தில் அரைகுறையாகக் கட்டிவிடப்பட்டிருந்த ஒரு கோயிலே வாணியரும் வண்ணுரும் இன்னும் சில தொழிலாளிகளும் சேர்ந்து நன்கொடை வாங்கிக் கட்டி முடித்தற்காக அந்தத் தொழிலாளி வகுப்பினர் கொடுக்கவேண்டிய வரிகளேத் தள்ளிவிட்டான்.

இராஜ நாராயணனுடைய ஆட்சியின் முற்பகுதியில், அதாவது கி. பி. 1342ல், துருக்கர்களோடு எதிர்த்துப் பலகாலும் போராடிய போசலப்பேரரசன் வீர வல்லாளன் மறைந்தான். அப் பேரரசும் அழிந்தது. வீரவல்லாளனும் இந்த சம்புவராயர்களும் துருக்கர்களால் நேர்ந்துவரும் பேரழிவுகளேப்பற்றிக் கலந்து பேசாமலிருந்திருக்க முடியாது. காஞ்சிபுரத்தில் இவர்கள் சில சமயம் சேர்ந்து தங்கியிருக்கிருர்கள். துருக்கர்களிடத்து இவன் எந்த நோக்கத்துடன் இருந்தான் என்று சொல்லமுடியவில்லே. ஆனுல் இவன் துருக்கரோடு போராடிய வீரவல்லாள தேவனுக்கு எவ்வழியிலும் உதவியாக இருந்ததாகக் கூறமுடியவில்லே. தன்னலம் தலேயிட்டிருக்குமோ? ஆராய்ந்துதான் சொல்லவேண்டும். இவன் ஆட்சியின் பிற்பகுதி அவ்வளவு சிறப்பாக இருந்திருக்க முடியாது. கி. பி. 1351 அளவில், விஜயநகரமன்னர்களேச் சேர்ந்த வீரசேவண்ணு என்பவன் இவன் நாட்டைக் கைப்பற்றிஞன்; இதில் படைத்தலேவனுக வந்தவன் சாளுபமங்கு என்பவன். பின்னர், வீரசேவண்ணு, தான் பிடித்த நாட்டை இராஜநாராயணனிடமே கொடுத்து விஜயநகரத்துக்கு உட்பட்ட அரசனுக ஆட்சி செய்யும்படி நியமனம் செய்தான். சம்புவராயரிடமிருந்து கைப்பற்றிய நாட்டை மீண்டும் அவனிடமே கொடுத்து அந்த மரபை ஆட்சி

யில் நிலைநிறுத்தினபடியால் இப்படையெடுப்பில் கலந்துகொண்ட விஜயநகர இளவரசர்களும் படைத்தலைவர்களும் 'சம்பராயஸ்தாபனாச்சாரியார்' என்ற சிறப்புப் பெயரைச் சூட்டிக்கொண்டனர்.

பேரரசும் சிற்றரசும் ஒருசேர ஆட்சிசெய்ய வேண்டியதானபோது சம்புவராயநாட்டில் அமைதி குறைந்தது. மக்களுக்குத் தங்கள் நாட்டு வழிவழி மன்னனிடம் இயற்கையாகவே பற்றுதல் மிகுந்திருந்தது; பேரரசின் பகுதியாகிய சில ஆட்சிமுறைகள் ஊழலாயின; நெடுங்காலமாகக் காவற்றொழிலை ஒழுங்காகப் பார்த்துவந்தவர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செலுத்தாதுவிடவே நாட்டில் கொள்ளைகளும் மிகுந்தன. கி. பி. 1355ல் பொறிக்கப் பெற்ற ஒரு கல்வெட்டு படுவூரிலுள்ள நாற்பத்தெட்டு அகம்படியர்கள் தங்கள் காவற்கடமையைச் சரிவரச் செய்யாதபடியால் வீரசேவண்ண உடையாரால் தண்டிக்கப்பட்டார்கள் எனக் கூறுகிறது. கோயில் சொத்துக்களும் கொள்ளைகொள்ளப் பெற்றன.

இராஜநாராயணனுக்குப் பின்னர், அவன் மகன் இரண்டாம் வென்றுமண்கொண்டான் கி. பி. 1359ல் சம்புவராய மன்னனாகத் தோன்றினான். கி. பி. 1362 அளவில் வீர கம்பண்ணன் இவன்மீது படை எடுத்துவந்தான். சம்புவராயன் தன் மலையரணாகிய படைவீட்டிற்குட் புகுந்து மேற்செய்யவேண்டியவைகளுக்கு ஏற்பாடு செய்ய எண்ணினான். அந்தப் படைவீட்டை முற்றுகையிட்டு, கம்பண்ணனின் படைத்தலைவன் மாரப்பநாயக்கன் என்பவன் கி. பி. 1363ல் சம்புவராயனையும் கைப்பிடியாகப் பிடித்துக் கொணர்ந்தான். இந் நிகழ்ச்சியைக் கீழே குறிப்பிட்டுள்ள உரைநடையிலும் செய்யுளிலும் அமைந்த கல்வெட்டுப் படிகள் விளக்கமாகத் தெரிவிக்கின்றன.

### சம்புவராயரின் வீழ்ச்சி: வட ஆர்க்காடு ஜில்லா வந்தவாசி தாலுக்கா மாடம் என்ற ஊரிலுள்ள கல்வெட்டு.

*" ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமான் மகா மண்டலேஸ்வரன் ஹரி ராய விபாடன் பாஷைக்குத் தப்புவாராயர கண்டன் (2) மூவராயர கண்டன் பூர்வ பச்சிம சமுத்ராதிபன் ஸ்ரீ வீர பொக்கணவுடையார் குமாரர் ஸ்ரீமது கம்பணவுடையார் மகாபிர (3) தானி சோமய தண்ணாயக்கர் குமாரர் ஸ்ரீமது கண்டர கூளிமா

---

* இந்தக் கல்வெட்டுப் படிகள் Epigraphia, Indica Vol. XXVIII, No. 28ஆவதிலிருந்து திரு. தி. வி. சதாசிவப் பண்டாரத்தார் அவர்களால் படியெடுத்து உதவப்பெற்றன.

நாயக்கர் வென்றுமண்கொண்ட சம்புவராய(4)ரையும் ஜயித்துக் கைப்பிடியாகப் பிடித்து இராஜகம்பீரன் மலையும் கொண்ட தக்கு சந்திராதித்தவரையும்(5)செல்லக்குடுத்த அண்ணமங்கலம்பற்று ||சகப்தம் ஆயிரத்து இருநூற்று எண்பத்தைஞ்சின்மேல் செல்லா (6) நின்ற சோபகிருது சம்வத்சரத்து குளத்தூர் ஆளுடையார் திருவக்கீஸ்வரமுடைய மகாதேவர்க்கு இரண்டாம் (7) பிரகாரத்தில் பண்ணின தர்மம் கண்டரகூளிமாராய நாயக்கன் திருக்கோபுரம் 2'

பூமேவு தாரளகம் * பூண்டாகத் திருமடந்தை
தேமேவு மாலை புனை திருமார்பிற் சிறந்திலங்கச்
சென்றதிசை வென்றுவரச் செயமடந்தை தோள்மேவ
வென்றிபுனை மேவளர்க ளடிவணங்க மேகமலி
வாளகிரியுலகு புகழ்வரி (கழற்)காற் புக்கணனுங்
காள மூகில்போல் வழங்கு கம்பணனுங் கொண்டாட
மண்டலிக ராலிப்ப வயப்புலவர் வளம்பாட
கண்டவர்க ளுளமகிழக் காசினியில் கலிதீரச்
சம்பனரண் பலவழித்துச் சம்பனையுங் கைக்கொண்டு
வெம்பரியை மேல்கொண்டு வேறுமுள குறும்பறுத்துத்
தனக்குநிகர் தானான சோமயதண் ணாயக்கன்
மனக்களிகூர்ந் தினிதிருப்ப மண்புரந்த மாரப்பன்
முறைமைநெறி தவறாத மூவராயிர கண்டன்
கறைமலியும் வேற்றடக்கைக் கனைகழற் கண்டரகூளி
கருணைவழி முதலாகக் காணியாகப் பெற்ற
அருணமணி மதில்புடைசூ ழண்ணமங்கலப் பற்றில்
வள(ர்)ந்தநெடு மாலயனவ் வானவர்கோன் வந்திறைஞ்சுங்
குளந்தைவளம் பதியீசர் கோலமலர்த் தாள்வணங்கிக்
கண்ட கோபுரங் கண்டுகை தொழுபவ
ரண்ட ராகுப ரனைவருந் தொழவே.

* பூண்டாங்கு என இருக்கலாம்.

இராஜகம்பீர இராச்சியமும் சம்புவராயர் தனியரசும் கி. பி. 1363ல் மறைந்தனவெனினும் அதின் பல பகுதிகளையும் நன்கு ஆராய்வோருக்கு உலகியலினும் அரசியலினும் நலம் தரத்தக்க பல உண்மைகளைத் தெரிவிப்பதாகும்.

(தொடரும்)

[சென்ற இதழின் தொடர்ச்சி]

தமிழர் பண்பாடு 5

# ஆளுவோர்க்கு அறிவுரைகள்.

(பதிப்புரிமை ஆசிரியருக்கே)

சாமி. சிதம்பரனார்.

## வரிக் கொடுமை.

பண்டைக்கால மன்னர்களிலே தந்நலங் கருதி, மக்கள் தலையிலே வரிச்சுமையை ஏற்றியவர்களும் உண்டு. தாங்கக் கூடியவர்களிடம் வரி தண்டுவதில் தவறில்லை. கொடுக்கும் வல்லமையற்ற ஏழை எளியவர்கள் தலையிலே வரியைச் சுமத்துவது அறம் அன்று. வரிகொடுக்கும் வல்லமையற்றவர்கள் தங்கள் துன்பத்தைத் தாங்கமுடியாதபோது ஆட்சிக்கு எதிராகத் திரும்பிவிடுவார்கள். இந்த உண்மையைப் பழந்தமிழ் அறிஞர்கள் உணர்ந்திருந்தனர். மன்னர்கள் குடிமக்களிடம், அளவுக்குமேல் வரி வாங்க முற்படும்போது புலவர்கள் தலையிட்டனர்; அரசர்களுக்கு அறிவுரை கூறினர்; அவர்கள் செய்கையைத் தடுத்தனர்.

இவ்வுண்மையைப் பிசிராந்தையார் என்னும் புலவர் பாடல் ஒன்று விளக்கமாகக் கூறுகின்றது.

பாண்டியன் அறிவுடை நம்பி என்பவன் குடிமக்களிடம் அளவுக்குமேல் வரி வாங்கினன். அதைக்கண்ட பிசிராந்தையார் மன்னனிடம் அரச நீதியை எடுத்துக்காட்டி அவன் செய்கையைத் தடுத்தார்.

"விளைந்த நெல்லை அறுத்துக் கொண்டுவந்து கவளமாகச் சேதப்படாமல் உண்டால், ஒரு மாவுக்கும் குறைந்த நிலத்திலே அறுத்த கதிர் பல நாட்களுக்கு உணவாகும். நூறு வயல்களிலே நெல்விளைந்திருந்தாலும் சரி, ஒரு யானை தனியாக அவ்வயல்களிலே புகுந்து நெற்கதிரை உண்ணுமானல் வீண் சேதமாகும். அதன் வாயில் புகுந்த நெல்லைவிட, அதன் காலால் பாழாகும் நெல்லே மிகுதியாக இருக்கும். அதைப்போல அறிவுள்ள வேந்தன் வரிவாங்கும் முறையை உணர்ந்திருக்க வேண்டும். மக்கள் மனங்கோணாதபடி வரி வாங்கவேண்டும். இவ்வாறு வரி வாங்கினல் அவனுடைய நாடு கோடிக்கணக்கான பொருளைக் கொடுக்கும்; அந்நாடும் சிறப்படையும்; செழிப்படையும். இவ்வாறில்லாமல் அரசன் அறிவிலே குறைந்தவனுகி, தான் கூறுவது தவறானாலும் அதையே சரியென்று சொல்லும் சுற்றத்துடன்

கூடியிருப்பானாயின் அவன் வரி கொள்ளும் முறையை அறிய மாட்டான்; குடிமக்களின் அன்பு அழியும்படி, அவர்கள் வெறுக்கும்படி அவர்களிடம் வரி யென்னும் பேரால் பொருள்களை வலிந்து கொள்வான். இவ்வாறு வரி வாங்குவானாயின், அம் மன்னன், யானை புகுந்த வயலைப்போலத் தானும் உண்டு இன்புற மாட்டான்; அவனால் ஆளப்படும் நாடும் நாசம் உறும்.

காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறைவு இல்லதும் பன்னாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்கு உணினே
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடைவேந்தன் நெறிஅறிந்து கொளினே
கோடியாத்து நாடு பெரிதும் நந்தும்;
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்என் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான்; உலகமும் கெடுமே."

இதுவே பிசிராந்தையார், பாண்டியன் அறிவுடை நம்பிக்குக் கூறிய அறிவுரை. அளவுக்குமேல் வரி வாங்குவதனால் வரும் இன்னலைப்பற்றி இதற்குமேல் விளக்கிக்கூற இயலாது. இது புறநானூற்றின் 184வது பாடல். இப்பாடற் கருத்தை அப்படியே சிந்தாமணி ஆசிரியர் அமைத்துப் பாடியிருக்கின்றார்.

"வாய்க்குப் போதுமான கவளம் அகப்படும்; வீண் சேதமும் உண்டாகாது; முறைப்படி அறுத்துக்கொண்டு வந்த நெல்லை ஒவ்வொருநாளும் கவளமாக உண்பித்தால் இந்நிலை ஏற்படும். யானையே வயலில் புகுந்து மேயத் தொடங்கினால், விளைந்திருக்கும் கதிர் அதன் வாயில் புகாமல் வீணாக அழியும். ஆதலால் அரசன் அறிவில் சிறந்தவனாய்க் குடிகளின் நெஞ்சம் துன்புறாமல் வரி வாங்குவானாயின் அவன் இன்பம் அடைவான்; அவன் ஆளும் நீர்வளம் நிறைந்த நாடு முழுவதும் செல்வம் நிலையாகப் பெருகி நிற்கும்.

வாய்ப்படும் கேடும் இன்றும், வரிசையின் அறிந்து, நாளும்
காய்த்தநெல் கவளம்தீற்றின்; களிறுதான், கழனி மேயின்,
வாய்ப்படல் இன்றிப் பொன்றும், வல்லனாய் மன்னன்கொள்ளின்
நீத்தநீர் ஞாலம்எல்லாம் நிதிநின்று சுரக்கும் அன்றே"

(சீ. சிந்தாமணி 2907)

இதுவே சிந்தாமணிச் செய்யுள். இதுவும், அளவுக்குமேல் வரி வாங்கும் அரசு நிலைக்காது, குடிகளின் நிலையறிந்து குறைந்த

அளவில் வரி வாங்கும் அரசுதான் வாழும், இத்தகைய ஆட்சியுள்ள நாடுதான் செழிக்கும், என்று கூறிற்று.

திருவள்ளுவரும் மக்கள் தலையிலே வரியைச் சுமத்துவதை ஒத்துக்கொள்ளவில்லை. வேறுவகையிலே அரசன் பொருள் தேடவேண்டும் என்றே கூறுகின்றார்.

"பொருளுக்கு உரியவர் யாரும் இல்லாமல் விடப்பட்ட செல்வம்; நீர்வழியாகவும், நிலத்தின் வழியாகவும் வேற்று நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு விதிக்கப் படும் வரி; தன் பகைவர்களிடமிருந்து கப்பமாக வாங்கப்படும் பொருள்; இவைகளே அரசனுக்கு உரிய செல்வம்.

"உறுபொருளும், உல்கு பொருளும், ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்." (கு. 756)

இது வள்ளுவர் காட்டும் வழியாகும். இக்குறளும் மக்களிடம் நேர்முகமாக வரி வாங்கும் கொள்கையை ஒப்புக்கொள்ளவில்லை.

இயற்றலும், ஈட்டலும், காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு. (கு. 385)

என்ற குறளிலும் நேர்முகமாக மக்களிடம் வரி வாங்கும்படி சொல்லவில்லை. தனக்குப் பொருள்வரும் வழிகளை மேலும் மேலும் உண்டாக்குதல்; அவ்வாறு வந்த பொருளை ஓரிடத்திலே சேர்த்து வைத்தல்; சேர்த்த பொருளைப் பிறர் கவராமல் பாது காத்தல்; காத்த பொருளை அறம், பொருள், இன்பங்களுக் காகச் செலவழித்தல்; ஆகிய இவைகளில் வல்லவனே அரசன் ஆவான்"—இதுவே இக்குறளின் பொருள்.

'இயற்றல்' என்பதற்குப் பரிமேலழகர் கொடுத்திருக்கும் விளக்கம் குறிப்பிடத் தக்கது. "பொருள்களாவன: மணி, பொன், நெல் முதலாயின: அவை வரும் வழிகளாவன: பகைவரை அழித்தலும், திறைகோடலும், தன் நாடு தலையளித்தலும் முதலாயின". இவ் விளக்கத்திலும், பொதுமக்கள் தலையிலே வரியைச் சுமத்தும் செயல் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசனோ, பொதுமக்கள் ஆட்சியோ, எடுத்தவுடனே மக்களின்மேல் அளவுக்கு மீறிய வரி போட்டுப் பொருள் சேர்க்கும் முறையைப் பின்பற்றுவது அறமன்று. இவ்வுண்மையை மேற்கூறியவைகளால் அறியலாம். அறிஞர்கள் மக்கள்மேல் அதிக வரி போடுவதை எதிர்த்து வந்தனர் என்பதையும் காணலாம்.

**பொதுமக்கள் ஆதரவு.**

முடி அரசாயினும் சரி, குடி அரசாயினும் சரி, பொதுமக்களின் ஆதரவைப்பெற்ற அரசுதான் நிலைத்து நிற்கும்; எல்லா மக்களும் நல்வாழ்வு பெறத்திட்டம் வகுத்து, அதனை நன்றாக நடத்திவைப்பதே ஆட்சியின் கடமை. சாதி, மத, இன, மொழி வேற்றுமை பாராட்டாமல் அனைவர்க்கும் ஒத்த நீதி வழங்குவதே ஆளுவோர் கடமை; இத்தகைய ஆட்சியே செங்கோல் ஆட்சி, மக்கள் ஆட்சி, என்று சொல்லப்படும்.

படை பலத்தையும், அதிகார உரிமையையும் காட்டி மக்களை அடக்கி ஆண்டுவிட முடியாது; நல்லாட்சிக்கு நாட்டு மக்கள் அனைவரும் அடங்கி நடப்பார்கள்; நல்லாட்சியை எதிர்த்துக் கவிழ்க்க எவராலும் ஆகாது. இந்த உண்மையை மறந்த ஆட்சி எதுவாயினும் அதற்கு ஆயுள் அற்பந்தான்.

இந்த இயற்கை உண்மையைப் பண்டைக்காலத் தமிழ் அறிஞர்கள் அரசர்களுக்கு அடிக்கடி எடுத்துக்காட்டி வந்தனர். மன்னர்களின் ஆட்சி கொடுங்கோல் ஆட்சியாக மாறாமல் இருப்பதற்கு அவர்களால் ஆனவரையில் அரும்பாடுபட்டு வந்தனர்.

பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறன் என்பவன் ஒரு பாண்டிய மன்னன். அவனுக்கு, மருதன் இளநாகனார் என்ற புலவர் அறிவுரை கூறுவதாக ஒரு செய்யுள் புறநானூற்றில் காணப்படுகின்றது. அச்செய்யுளில் காணப்படும் அரசியல் உண்மை எக்காலத்திற்கும் ஏற்றதாகும்.

கடுமையான கோபத்தையும், கொல்லுந் தன்மையும் உள்ள யானைப் படையிருந்தால் என்ன? விரைந்து செல்லும் நெஞ்சுரம் உள்ள குதிரைப் படையிருந்தால் என்ன? நீண்ட கொடியை உடைய உயர்ந்த தேர்ப்படை இருந்தால் என்ன? அஞ்சாத நெஞ்சம் உள்ள போரை விரும்புகின்ற வீரர்கள் நிறைந்த காலாட்படை இருந்தால் என்ன? இவைகள் எவ்வளவு சிறந்திருந்தாலும் அதனால் ஆட்சிக்குப் பெருமையில்லை. படை பலத்தால் மட்டும் வெற்றிபெற்றுவிட முடியாது. அறநெறி தவறாமையே ஆட்சிக்கு அடிப்படையாகும்; அதுவே அரசர்க்கு வெற்றி தருவதாகும்.

"கடும்சினத்த கொல்களிறும், கதழ்பரிய கலிமாவும், நெடும் கொடிய நிமிர் தேரும், நெஞ்சுடைய புகல் மறவரும், என, நான்குடன் மாண்டது ஆயினும் மாண்ட அறநெறி முதற்றே அரசின கொற்றம்'.

இதுதான் மதுரை மருதன் இளநாகனார் அரசனுக்கு உரைத்த அறவுரை. இது பழந்தமிழ் மக்களின் அரசியல் அறிவை எடுத்துக்காட்டுகின்றதன்றோ?

பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்தைப் பாடிய புலவர் பெருங்குன்றூர்க்கிழார். குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை யின்மேல் பாடப்பட்டது இந்த ஒன்பதாம் பத்து. இதில், சேரனுக்கு அப்புலவர் கூறும் அரசியல் அறிவுரை குறிப்பிடத் தக்கது.

"மிகுந்த வேற்படைகளையுடைய இரும்பொறையே! உன் னுடைய செங்கோல் முறையைக்கண்டு மகிழ்ந்து, ஒவ்வொரு நாளும் உனது நாட்டினர் உன்மேல் அன்பு மிகுந்து உன்னை வணங்கிப் பாராட்டுவார்களாக; உயர்ந்த இவ்வுலகில் உள்ள சான்றோர்கள் உன்னைப் போற்றுவார்களாக; அரசியலிலே எத்தகைய தவறும் ஏற்படாமல் பாதுகாப்பாயாக; உனக்கு நாட்டு மக்களின் அன்பும் ஆதரவும் இருப்பதனால், உன் பகைவருடன் செய்யும் போரிலே நீ வெற்றிபெறுவாயாக; நீயும் நீண்ட நாள் நோயின்றி—எத்தகைய துன்பமும் இன்றி வாழ்வாயாக;

பல்வேல் இரும்பொறை! நின்கோல் செம்மையின்
நாளின் நாளின் நாடுதொழுது ஏத்த,
உயர்நிலை உலகத்து உயர்ந்தோர் பரவ,
அரசியல் பிழையாது, செருமேந்தோன்றி,
நோயிலை ஆகியர் நீயே" (பதிற்றுப்பத்து 89)

இப்பதிற்றுப்பத்துப் பாடலும் நாட்டு மக்கள் ஆதரவும் அன்பும் பெற்ற அரசனே நிலைத்து வாழமுடியும் என்று கூறிற்று. 'நாளின் நாளின் நாடுதொழுது ஏத்த' என்ற வரியில் அமைந்த ஆழமான பொருள் என்றும் அழியாத உண்மையாகும்.

குடிகளின் ஆதரவைப்பெற்ற அரசன்தான் நிலைத்து வாழ முடியும் என்ற கருத்தை வள்ளுவரும் வலியுறுத்துகின்றார்.

"தனது நாட்டுக் குடிமக்களின் கருத்தைத் தழுவி, செங்கோல் நடத்தும் அரசனது அடியை உலகம் ஆதரித்து நிற்கும்.

"குடிதழீஇக் கோல் ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு" (கு. 544)

இக்குறள் குடிமக்களின் கருத்தைத் தழுவி ஆளுவதே சிறந்த ஆட்சியென்பதை எடுத்துக்காட்டிற்று.

"அரசனுக்குப் போரிலே வெற்றி தருவது அவனுடைய வேற்படை அன்று. அவனுடைய செங்கோல்தான் வெற்றி தரும்; அதுவும் சிறிது வளையாமல் இருக்கவேண்டும்.

வேல்அன்று வென்றி தருவது, மன்னவன்
கோல்; அதூஉம் கோடாது எனின்" (கு. 546)

இக்குறள் 'அரசனுக்கு வெற்றியளிப்பது அவனுடைய செங்கோல் தான்; படை வலிமையால் மட்டும் பயன் இல்லை' என்று கூறிற்று.

குடிமக்களைத் தழுவி நடக்காத அரசுக்கு வெற்றியில்லை; எவ்வளவு ஆயுத பலம் படைத்திருந்தாலும் கொடுங்கோல் அரசுக்குக் கொற்றமில்லை; வாழ்வும் இல்லை. இக்கருத்தையே மேலே காட்டிய இரண்டு குறள்களும் வலியுறுத்துகின்றன.

பண்டைத் தமிழ்ப் புலவர்களிலே பலர் சிறந்த அரசியல் அறிஞர்களாக இருந்தனர் என்பதை அவர்கள் பாடல்கள் காட்டுகின்றன. அவர்கள் நாட்டு மக்களின் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டிருந்தனர். அடிக்கடி அரசர்களுக்கு அரசியல் நீதிகளை அஞ்சாமல் எடுத்துரைத்து வந்தனர்.

அரசர்கள் எவ்வளவு வலிமையுள்ளவர்களாக இருந்தாலும், அறிவுள்ளவர்களாக இருந்தாலும் அவர்கள் சான்றோரைத் துணையாகக்கொண்டிருக்கவேண்டும், அவர்கள் சொல்வழி ஆட்சி புரியவேண்டும், என்றும் வலியுறுத்தி வந்தனர்.

"தம்மைக்காட்டிலும் கல்வியறிவுகளிலே சிறந்த பெரியோர்களைத் தமக்குத் துணையாகக்கொள்ளவேண்டும்; அப்பெரியோர்கள் காட்டும் வழியிலே நடக்கவேண்டும்; இதுவே அரசர்களுக்கு எல்லா வலிமைகளிலும் சிறந்த வலிமையாகும்.

தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை (கு. 444)

"தான் தவறு செய்யும்போது சிறிதும் அஞ்சாமல், கண்டித்துப் புத்திபுகட்டுவோரைத் துணையாகக்கொள்ளாத வேந்தன் சிறிதும் பாதுகாப்பற்றவன்; அவனைக் கெடுப்பதற்குப் பகைவர்களே வேண்டாம்; அவனே அழிந்துபோவான்.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்" (கு. 448)

பண்டைப் புலவர்கள் அரசர்களுக்கு வலியுறுத்திவந்த கருத்து :—

படைபலத்தைக்காட்டி மன்னர்கள் மக்களை அச்சுறுத்தித் தங்கள் விருப்பப்படி ஆள முடியாது. மக்கள் ஆட்சியினர், குடிமக்களுக்கு எந்த நன்மையும் செய்யாமல் "மக்களாட்சி—குடிமக்கள் ஆட்சி—ஜனநாயக ஆட்சி—சுய ஆட்சி—என்ற சொற்களைக்கூறிக்கொண்டு ஏமாற்ற முடியாது. நாட்டு மக்களின் ஒத்துழைப்பைப்பெறாமல் அரசாளமுடியாது; ஆட்சியிலே நிலைக்க முடியாது. ஆட்சி பீடத்திலே அமர்ந்திருந்தாலும் நீடித்து வாழ முடியாது. இவ்வுண்மையைப் பழந்தமிழ் இலக்கியங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றன. (தொடரும்)

# நவமணித் தேர்ச்சியில் தமிழரது கலையுணர்ச்சி.

[K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.]

மாணிக்கங்களில், பதுமம், நீலம், விந்தம், படிதம் என்ற நான்கு வகைகளுண்டென,

மாணிக்கத்தியல் வகுக்குங்காலே
சமனொளி சூழ்ந்த வொருநான்கிடமும்
நால்வகை வருணமு நவின்றவிப் பெயரும்
பன்னிரு குணமும் பதினறு குற்றமும்
இருபத் தெண் வகை யிலங்கிய நிறமு
மருவிய விலையும் பத்தி பாய்தலு
மிவையென மொழிப வியல்புணர்ந் தோரே

* * *

வன்னியிற் கிடக்கும் வருண நாற்பெயரும்
முன்னிய சாதுரங்கம், ஒளிர் குருவிந்தம்
சௌகந்தி கோவாங்கு தானு கும்மே!

எனப்படுவதால் ஒருவாறு துணியப்படும். பதுமமும் பதுமராகமுமொன்றே. இதனைச் சாதுரங்கமெனவும் பகர்வர் பண்டைக்கால முன்னோர். இது செந்நிறமுடையதாய்த் திகழும். தாமரை மலரின் இதழ்போல் சிவந்து நல்ல நீரோட்டம்கொண்டு எழிலுடன் விளங்கா நிற்கும். சாதுரங்க மாணிக்கத்தை எண்ணியே, சுந்தரரும்,

'தொண்டரடித் தொழலுஞ் **சோதியிளம் பிறையுஞ்**
சூதன மென்முலையாள் பாகமு மாகிவரும்
**புண்டரிகப் பரிசா மேனியும்**'

எனச் சிவபெருமானைத் தாமரை போன்ற திருமேனியுடையாரெனப் போற்றிப் புகழ்ந்தது ஈண்டு நினைவு கூரற்குரியது.

பதுமராக மாணிக்கங்கள், வைரம் போலில்லாது கனமாக இருத்தல் வேண்டும். கனம் அதிகமாயிருப்பின் நீரோட்டமும் ஒளியும் மிகும். கீழ் நோக்கியே நீரோட்டம் வீசும் பதுமராகக் கற்கள் நன்மை பயவா மாணிக்கங்களாகும். அப்பிரகம் என்ற உலோகக் கல்லின் நிறம் போன்ற பதுமராக மாணிக்கங்களைப் பூணுவோரது ஆயுளும் செல்வமும் ஒருங்கே குறையும். கரடுமுரடாயிருக்கும் பதுமராகக் கற்களை அணிபவர் வறுமையால் வாடி, வாழும் நாட்டினை விட்டேகுவார். செந்தாமரையின் இதழ் போன்றும், மாதுளை மலர் போன்றும், பட்டுப்பூச்சியின்

நிறம் போன்றும், மின்மினி, விண்மீன் ஆகியவற்றின் ஒளி போன்றும் விளங்கும் பதுமராகத்தை அணிபவருக்குப் பல் வகையான நன்மையும் செல்வமும் மல்கிப் பெருகும். பல வகையாய கருமப்பிணிகளும் அகலும். நலம் பயக்கும் உயர்ந்த பதுமராகத்தின் ஒளி பத்து வகையென வழங்கப்பட்டு வந்தமை

சாதகப் புட்கண் தாமரை கழுநீர்
கோப மின்மினி கொடுங்கதிர் விளக்கு
வன்னி மாதுளம் பூவிதை யென்னப்
பன்னு சாதுரங்க வொளி குணம் பத்து

என்று கல்லாடம் வலியுறுத்துவதான் விளங்கும்.

நீலமென்பதை நீலகந்தி யெனவும் சௌகந்தி யென்றும் கூறுவர், மாணிக்கங்களின் கூறுபாட்டை ஆய்ந்தறிந்த முற்காலத் தமிழ் மக்கள். சௌகந்திக்கு அறுவகை நிறங்கள் மொழியப்படு மென்பதை

'கோகிலக்கண், செம்பஞ்சு கொய்ம்மலர்ப் பலாசம்
அசோக பல்லவம் அணிமலர்க் குவளை
யிலவத் தலர்களென்றுறு குணமும்
சௌகந்திக்குச் சாற்றிய நிறனே'

என்ற சூத்திரத்தான் அறியற்பாற்று. மற்றும்

'அசோக பல்லவம் அலரி செம்பஞ்சு
கோகிலக் கண்ணீ ளிலவளர் செம்பெனத்
தரு சௌகந்தி தன்னிற மாறு'

என்ற கல்லாடத்துக் கவின்றமிழும் ஈங்கு நினைவு கூர்ந்து கவனிக்கற்பாலது. இதன்கண் குவளைக்குப் பதிலாக செம்பு நுவலப்படுவதறிக. சௌகந்தி பெரும்பாலும் ஆழ்ந்த நீலநிறத் துடன் சிறிது செந்நிற நீரோட்டமுங்கொண்டு ஒளி வீசும். இவ் வித நீரோட்ட ஒளி நீலக் கற்கள் பால் காணப்படுவதில்லை. இஃதொன்றே நவமணிகளில் தனியாய் எடுத்துக் காட்டப்படும் நீலத்திற்கும் மாணிக்க வருக்கத்து நீலகந்திக்குமுள்ள வகை வேறுபாட்டினை விதந்து விளக்கிக் காட்டும்.

விந்தமென்பது குருவிந்தமென்றும், இரத்தவிந்து என்றும் வழங்கப்படும். இதனை உலக வழக்கினிலே கெம்பு என மொழி யப்பட்டாலும், வாகீசப் பெருந்தகை இதைக் குருமணியென்பர்.

'கருமணியைக் கனகத்தின் குன்றொப்பானைக்
கருதுவார்க் காற்ற வெளியான் றன்னைக்
குருமணியைக் கோளரவ மாட்டுவானைக்
கொல் வேங்கைய தளானைக் கோவணவன்றன்னை

என்பது திருமுதுகுன்றத்துத் திருத்தாண்டகம். இதனை 'உள்ளிருந்தெழுந்து புறம்புகின்றெரியு, மளவாத் திரு மணி' யெனக் கல்லாடம் பகரும். இத்தகைய மணி, மிக்க வழவழப் புடன்கூடி சிவப்பு நிறமும், அதிக நிறையும் நீரோட்டமுங் கொண்டு நாலாபக்கங்களிலும் நல்லொளி வீசும். குருமணிக்குப் புறம்பாய் எப்பொருளையேனும் எதிர்முகமாய்க் காட்டினாலும் அப்பொருளின் சாயல் அம்மணியில் தோன்றும். இத்தகைய மணிகளை அணிவோர் அரசர் பதவி பெறுவரென்பர் அறிவர். குருவிந்தத்தின் நிறம் பின்வருமாறு,

'திலகமு லோத்திரஞ்செம் பருத்திப்பூக்
கவிர் மலர் குன்றி முயலுதி ரம்மே,
சிந்து ரங்குக்குற் கண்ணென வெட்டு
மெண்ணிய குருவிந்த மண்ணிய நிறமே'

இதனைக் கல்லாடமும் ஏற்குமென்பதை 'கதிர் நிறை' எனும் 99-ம் செய்யுளில் கண்டுகொள்க. இன்னண வண்ணங்கொண்டு நிகழ்வதாய குருவிந்தம் இக்காலத்தில் காண்டற்கரிதாயிருந் தாலும் சைவ சமய குரவர்கள் காலத்தில் குருவிந்த மணிகள் சிறந்து உருவெழில்கொண்டு மிளிர்ந்த ஒட்பத்தினை தேவாரப் பாசுரங்கள் வழி, ஓரோவழி, நுனித்துணர்ந்து கொள்ளப்படும். சிவபெருமான், குருவிந்தம் போன்று நெருப்பு உருவாய் வயங்கு கின்றாரென்பதை, அப்பர், 'சுடரிற்றிகழ்கின்ற சோதி', 'எரி போன் மேனிப்பிரான்' என்ற எழிலுறும் தொடர்களான் புலப் படச் செய்வார். குருமணியின் பெருமாட்சிமையே, புகலி வேந்தர் திருமொழியிலும்,

'பருமாமத கரியோடரி யிரியும்விரி சாரல்
குருமாமணி பொன்னோடிழி யருவிக் கொடுங் குன்றம்'
'எரிவளரினமணி புனமணி சாரல்
இடைச் சுர மேவிய விவர்வண மென்னே'

வன்றொண்டர் வாக்கிலும்

'ஏனத்திரள் கிளைக்க வெரிபோல மணிசிதறத்
தீயென்றவை மலைச்சார லிற்றிரியுங் காடியும்
மானும் மரையினமும் மயின் மற்றும் பல வெல்லாம்
தேனுண் பொழில்சோலை மிகுசீபர்ப் பதமலையே'

எனத் தெளிவான விளக்கத்தோடும் எழுவதாயிற்று.

படிதம் என்பது கோவாங்கு. கோவாங்கின் நிறம்

'கோவைநற் செங்கல்குராமலர் மஞ்சளெனக்
கூறிய நான்கும் கோவாங்கு நிறமே'

என்ற சூத்திரத்தானும்,

'செங்கல் குராமலர் மஞ்சள் கோவை
குங்கும மஞ்சிற் கோவாங்கு நிறம்'

என்ற கல்லாடத்துக் குறிப்பினுலும் தெற்றெனத் தெளிவாகும். இதன் நிறத்தினியல்பு

'கந்தமலர்க் கொன்றையணி சடையான் றன்னைக்
கதிர்விடுமா மணி பிறங்கு கனகச் சோதி
சந்தமலர்த் தெரிவையொடு பாகத்தானை'

என்ற திருச்செங்காட்டங்குடி திருத்தாண்டகப் பகுதியான் விளக்கமாம்.

மாணிக்கங்களில், பெரும்பற்றப்புலியூர் நம்பியடிகள், கோமளம் குருவிந்தம், பதுமராகம், பணுமணி என்ற நான்கினையே ஓரின முடைய மணிகளென்பர். இவற்றுள் பணுமணி என்பது நாக மணி அல்லது நாகரெத்தினம் எனப்படும். நாகங்கள் மேய்த லுக்குச் செல்லுங்காரணமாக ஒளிவிளக்கம் உண்டாகும்படி தனது மணியை உமிழ்ந்து வைத்தல் அவைகளுக்குரிய இயற்கை வழக்கமாம். இதனை

நாம நல்லராக் கதிர்பட உமிழ்ந்த
மேய் மணி விளக்கு — [அகம் 72]

மேய் மணி யிழந்த பாம்பின் நீநனி
தேம்பினை — [அகம் 372]

என்ற அகப்பாக்களின் குறிப்புகள் நன்கினிது புலப்படுத்தும். மற்றும் தேவாரத் திருப்பதிகங்களும்

'சுடுமணி யுமிழ் நாகஞ் சூழ்தர வரைக்கசைத்தான்
இடு மணி யெழிலானை'

'மணி யுடைய மாநாக மார்பர்'

'அரவுமிழ் மணி கொள்சோதி யணியண்ணு மலையுளானே.

'ஊருமரவம் மொளிகொண் மாமணி
யுமிழ்ந்தவை யுலாவி வரலால்'

என நட்பதிட்பஞ் செறிய விளங்க வைத்தமை காண்க.

கோமளம் என்பது தண்மையும் மென்மையும் அழகும் பொருந்திய திருமணி. இருளினையகற்றும் இயல்பான ஒளியினை யுடையது. வாட்டமும் சுழற்சியுமின்றி என்றும் காண்டற்கு குளிர்ச்சியும் மலர்ச்சியுமுடன் இம்மணி வயங்குவதினுன் மணி

வாசகப் பெருந்தகை இறைவனது திருவருளையே திருமேனியழ கெனக்கொண்டு கோமளமணிக்கு ஒப்புமையாக,

'கொம்பரில்லாக் கொடிபோல லமந்தனன் கோமளமே!'

என அருள்வாராயினர். ஈண்டு இறைவன், தன்னை அடைந்தாரை திருவருள் வெள்ளத்தில் மூழ்குவித்து இன்புறுத்தும் செயலின் இயல்பை, ஆளுடைய அடிகள் உணரவைத்த மென்மை அறியற்பாற்று. மற்றும் 'எங்கள் கோமளக்கொழுந்தே போற்றி' என பிறண்டும் அடிகளே ஏகதேச உருவகமாய் இறைவனை விளிப்பதினுன், இன்புறுத்தும் அருள் வண்மையுடைய இறைவன தியல்பு வலியுறுத்தப்பட்டது காண்க. கோமளமணியினை அணி பவர், மன்னுயிர்கள் மாட்டு என்றும் அருளுடையராய்த் திகழ் வர். அன்னவர் மாற்றற்கரிய மனக்கவலை எய்தாது பேரின் பத்தில் நீடூழிகாலம் வாழ்வர். இத்தகைய கோமளமணியின் சிறப்பியல்பினையுன்னி மணிவாசகர் ஞானமே திருவுருவான இறைவன் அருளே சத்தியாகப் பாகத்தேகொண்டு தமக்கு அருள்புரிந்ததைக் குறிக்க

'குணங்களுங் குறியுமில்லாக் குணக்கடல்
கோமளத் தோடுங்கூடி
அணைந்துவந் தெனையாண்டு கொண்டருளிய
வற்புதம் அறியேனே'

என்பாராயினர். இதன்கண், வாழும் மன்னுயிர்களை முத்தியின் பத்திற் சேர்ப்பது சத்தியோடுகூடிய சிவமேயாமென ஆளுடைய அடிகள் சுட்டிய திறம் உளங்கொளற்பாலது. இதனை

'அருளது சத்தியாகும் அரன் றனக்(கு) அருளை யின்றித்
தெருள் சிவமில்லை; அந்தச் சிவமின்றிச் சத்தியில்லை
மருளினை அருளால்வாட்டி மன்னுயிர்க்களிப்பன் முத்தி
இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப்போல ஈசன்.'

என்ற சிவஞானசித்தித் திருவாக்கு ஈண்டு விளக்குதல் கண்டு கொள்க. அறநெறியிலாது பிறநெறி புகுந்து பிறவிக் கடலின் அலைகளால் மொத்துண்டு கிடப்பாரையும் தாங்கியும், அறிந்து பரிகரித்தும் கரைசேர்க்க வல்லான் தன் பொருட்டு குணமுங் குறியுங்கொண்டு படிப்படியாக அவற்றின் நீக்கி தன்னையும் நீக்கி யாண்ட பேரருளுடைமை தோன்ற 'கோமளமே' என ஆளுடைய அடிகள் இறைவனை அழைத்தது உளத்திருள் சிந்திட உயிர்க்காப் புச் செய்து ஒளிவிடும் கோமளமணியின் தன்மையினைப்பற்றிய இன்பத்தைக் குறிக்குமென்க. விரிப்பிற் பெருகும்.

[தொடரும்]

[முன் இதழின் தொடர்ச்சி]

# தஞ்சாவூர் இராசராசேச்சரக் கல்வெட்டு வரலாறு.

வித்துவான், வை. சுந்தரேச வாண்டையார்,
ஆராய்ச்சியாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

முதலாம் இராசராசசோழன் தஞ்சை இராசராசேச்சரமுடையார்க்கு அளித்துள்ள நிவந்தங்கள் :—

## 1. திருப்பதியம் விண்ணப்பிக்க நிவந்தம் :—

முதலாம் இராசராசன் தஞ்சை இராசராசேச்சரத்தில் திருப்பதியம் விண்ணப்பிக்கப் பிடாரர்கள் நாற்பத்தெண்மர்களையும், உடுக்கை வாசிக்க ஒருவரையும், கொட்டி மத்தளம் வாசிக்க ஒருவரையும், ஆக ஐம்பதின்மர்களை நியமித்து, அவர்களுக்கு ஆள் ஒன்றுக்கு இராசகேசரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் நாடோறும் முக்குறுணி நெல் கொடுக்குமாறு ஏற்பாடு செய்திருந்தான். ஒரு நாளைக்கு முக்குறுணி நெல் வீதம் ஒரு வருடத்திற்குத் தொண்ணூறு கலங்கள் ஆகின்றன. இது அக்காலத்தில் நல்ல சம்பளமாகவே இருந்ததாகக் கொள்ளவேண்டும்.

## திருப்பதியம் விண்ணப்பித்தவர்களின் பெயர்கள் :—

பாலன் திருவாஞ்சியத்து, அடிகளான இராசராசப் பிச்சனுன சதாசிவன். திருவெண்ணுவல் செம்பொற் சோதியான தட்சிண மேரு விடங்கப் பிச்சனுன ஞானசிவன். பட்டாலகன் அம்பலத்தாடியான மனேத்தம சிவன். பட்டாலகன் சீருடைக்கழலான பூர்வ சிவன். பொற்சுவரன் திருநாவுக்கரையனுன பூர்வசிவன். மகாதேவன் திருஞானசம்பந்தனுன ஞானசிவன், கயிலாயன் ஆரூரான தர்மசிவன். செட்டி எடுத்த பாதமான கவசசிவன். இராமன் சம்பந்தனுன சத்யசிவன். அம்பலவன் பக்தர்கள் ......... டனுன வாமசிவன். கம்பன் திருநாவுக்கரையனுன சதாசிவன். நக்கன் சீராளனுன வாமசிவன். அப்பி திருநாவுக்கரையனுன நேத்ரசிவன். சிவக்கொழுந்து சீராளனுன தர்மசிவன். ஐந்நூற்றுவன் வெண்காடனுன சத்யசிவன். அரையன் அணுக்கனுன திருமறைக்கா...... தர்மசிவன் அரையன் அம்பலக் கூத்தனுன ஓங்காரசிவன். ஆரூரன் திருநாவுக்கரையனுன ஞானசிவன். கூத்தன் மழலைச் சிலம்பான பூர்வசிவன். ஐந்நூற்றுவன் சீயாரூரான தத்புருஷசிவன். சம்பந்தன் ஆரூரனுன வாமசிவன். அரையன் பிச்சனுன தர்மசிவன். காசியபன் எடுத்த பாதபுச்சனுன ருத்திரசிவன். சுப்பிரமணிய ஆச்சனுன தர்மசிவன். கூத்தன் அமரபுஜங்கனுன சத்யசிவன். வெண்காடனுன அகோரசிவன். மாதேவன் திருநாவுக்கரையனுன விஞ்ஞானசிவன்.

---

* திருப்பதியம் விண்ணப்பித்தவர்களின் பெயர்களில் ஒன்று (அ) இரண்டை எழுதினுல் போதுமாயினும், என் அரிய நண்பரும், தேவாரத்தில் தலைசிறந்த புலமையுடையவருமாகிய திருவிடைமருதூர், திரு. நடராச ஓதுவார் அவர்களின் விருப்பப்படி நாற்பத்தெண்மர் பெயர்களையும் ஈண்டுக் குறித்துள்ளேன்.

ஐந்நூற்றுவன் திருவாய்மூரான அகோரசிவன். திருமலைக் கூத்தனான வாமசிவன். ஐந்நூற்றுவன் எடுத்த பாதமான தர்மசிவன். அரையன் தில்லைக்கரைசான பூர்வசிவன். காளி சம்பந்தனான தர்மசிவன். காபாலிக வாலியான ஞானசிவன். வெண்காடன் நமசிவாயமான ருத்ரசிவன். சிவன் அனந்தனான யோகசிவன். சிவக்கொழுந்து சம்பந்தனான அகோரசிவன். இராமன் கணவதியான ஞானசிவன். பிச்சன் வெங்காடனான அகோரசிவன். மறைக்காடன் நம்பி ஆரூரனான ஞானசிவன். சோமன் சம்பந்தனான ஞானசிவன். சத்தி திருநாவுக்கரையனான ஈசானசிவன். பொற்சுவரன் நம்பியாரூரனான தர்மசிவன். ஆச்சன் திருநாவுக்கரையனான நேத்திரசிவன். ஐயாறன் பெண் ஓர் பாகனான இருதயசிவன். இராஜாதித்தன் அம்பலத்தாடியான சிகாசிவன். செல்வன் கணபதி தெம்பனான தர்மசிவன். தில்லைக் கூத்தனான ஞானசிவன்.

உடுக்கை, கொட்டிமத்தளம் இவைகளை வாசித்தவர்களின் பெயர்கள் :—

உடுக்கை வாசித்தவன் துவைத கோமபுறத்து தத்யக்கிரம வித்தன் மகன் சூர்யதேவக் கிரமவித்தன் ஆன ஆலாலவிடங்க உடுக்கை விச்சாதிரனான சோமசிவன். கொட்டிமத்தளம் வாசித்தவன் குணப்புகழ் மருதனான சிகாசிவன்.

இங்குக் குறிக்கப்பெற்றுள்ள ஐம்பது பெயர்களின் இறுதியில் உள்ள அகோரசிவன், இருதயசிவன், ஈசானசிவன், ஓங்காரசிவன், கவசசிவன், சத்தியசிவன், சிகாசிவன், சோமசிவன், ஞானசிவன், தர்மசிவன், தத்புருஷசிவன், நேத்ரசிவன், பூர்வசிவன், மனோத்தமசிவன், யோகசிவன், ருத்ரசிவன், வாமசிவன், விஞ்ஞானசிவன் என்பவைகள் சிவதீட்சை செய்விக்கப் பெற்றகாலை வைக்கப்பெற்ற பெயர்கள்.

முதற் பெயர், இரண்டாம் பெயர், நாற்பத்தொன்பதாம் பெயர் இவைகளின் நடுவிலுள்ள இராசராசப் பிச்சன், தட்சிணமேரு விடங்கப்பிச்சன், ஆலாலவிடங்க உடுக்கை விச்சாதிரன் இவைகள் பட்டப் பெயர்கள் (Titles).

பாலன் திருவாஞ்சியத்தடிகள், திருவெண்ணாவல் செம்பொற்சோதி, பட்டாலகன் அம்பலத்தாடி, பட்டாலகன் சீருடைக்கழல் முதலானவை இயற்பெயர்கள்.

இவைகளினால், சிவதீட்சைபெற்றவர்களே திருப்பதியம் விண்ணப்பித்தல், அதுபொழுது கொட்டிமத்தளம் வாசித்தல், உடுக்கை வாசித்தல் ஆகிய இத்தொண்டுகளைச் செய்தற்கு உரியராவர் என்பதும் இத்தொண்டுகளில் சிறந்தவர்களுக்கு அரசன் பட்டங்களைச் சூட்டி சிறப்பிப்பது வழக்கமென்பதும் பெறப்படுகின்றன.

---

* வேதத்தை ஓதும் முறை, சம்ஹிதா, பதம், கிரமம், கனம், ஜடா என்று ஐந்து வகைப்படும். இவைகளில் கிரமம் என்ற முறைப்படி வேதத்தை ஓதியவன் கிரமவித்தன்.

இங்கு ஒரு குறிப்பு :—

பதியம் என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது. பதிகம் என்பதே இலக்கணமுடையது. பதியம் என்பது இலக்கணப் போலி (இயல்பு வழக்கு: நன்னூல்). பதியம் என்னும் இச்சொல் முதல் முதலாகப் பாலாற்றின் உபநதியாகிய நுகாவின் மேற்குக் கரையிலுள்ள திருவல்லம் (தீக்காலிவல்லம்) என்னும் ஊரிலுள்ள பில்வ நாதேஸ்வரர் கோயில் மகாமண்டபத்தின் வடபுறச் சுவரில் பொறிக்கப் பெற்றுள்ள "திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும் திருப்பதியம் பாடுவாருள்ளிட்ட பலபணி செய்வார்க்கு(ம்) நெல்லு நாநூற்றுக் காடியும்" – என்னும் கல்வெட்டுப் பகுதியில் காணப்படுகின்றது. இது, விஜய நந்தி விக்கிரமவர்மன் என்னும் பல்லவ மன்னனது ஆட்சியாண்டு பதினேழில் பொறிக்கப் பெற்றதாகும். இம்மன்னனே **நந்திக்கலம்பகம்** கொண்டவனும், தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என்று பேசப்படுபவனும் ஆவன். இவன் கி. பி. 830 முதல் கி. பி. 854 வரை ஆண்டவன். இக்கல்வெட்டு கி. பி. 847இல் (அதாவது ஒன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில்) தோன்றப்பெற்றது ஆதலின், அந்த ஆண்டில்தான் திருக்கோயில்களில் திருப்பதியம் பாட நிவந்தம் அளிக்கப்பெற்ற செய்தி கல்வெட்டினுல் முதல் முதல் அறியத்தக்க தொன்றும். அக்காலம் **திருப்பதியம் பாடுதல்** என்ற வழக்கு இருப்பினும் முதலாம் இராசராசன் காலத்தில் அவ்வழக்கு மாறி அதற்குப் பதிலாகத் **திருப்பதியம் விண்ணப்பம் செய்தல்** என்ற வழக்கு கையாளப்பட்டுள்ளது. மேலும் திருப்பதியம் பாடுவார் பிடாரர் என்று கூறப்பெற்றுள்ளனர்.

மேற்குறித்த **திருப்பதியம்** என்பது இங்கே தேவாரத்தைக் குறிப்பதாகும். முதலாம் இராசராசன் காலத்திலேயே மூவர் பதிகங்களுக்குத் தேவாரம் என்னும் வழக்கு உண்டு என்பது "**தேவார** தேவராக எழுந்தருளுவித்த தேவர்" என்னும் கல்வெட்டுப்பகுதி இதற்குச் சான்ருகும். தேவாரதேவர் என்பதற்குக் கல்வெட்டுத் துறையில் நுண்மாண் நுழைபுலம் பெற்றிருந்த டாக்டர் திரு. உல்ஷ் துரை 'தேவாரத்தைச் சொல்லி வணங்கிய கடவுள்' என்று பொருள் எழுதியிருப்பது ஈண்டு நோக்கத்தக்கது.

மேற்குறித்த திருப்பதியம் விண்ணப்பித்தவர்களின் இயற்பெயர்களுள் **கூத்தன் மழலைச் சிலம்பு** என்பது (19-வது பெயர்) "வாமத் தெழிலாரெடுத்த பாத மழலைச் சிலம்பார்க்கத், தீமெய்ச் சடை மேற் றிங்கள் சூடித் தேவ ஞடுமே" (திருவாலியமுதனுர் திருவிசைப்பா; கோயில்—பண் இந்தளம். பாடல் 5) என்னும் அடிகளையும், நான்காவது பெயரில் வந்துள்ள **சீருடைக்கழல்** என்பது "செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே" என்னும் திருவாசகச் சொற்றெடரையும் நம் நினைவிற்குக் கொண்டுவருவனவாகும். இவைபோன்று ஏனைய பெயர்களையும் நோக்குவோமாஞல் சிறந்த கருத்துக்கள் புலப்படும். [தொடரும்]